நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 03 வெள்ளிக்கிழமை (19.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 275




## வன்னியில் இருந்து இடம்பெயரும் மக்கள் வவுனியாவில் வாழ்வதற்கான சூழலில்லை


### யாழ்.ஆயர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

போர் நடவடிக்கைகள் காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து இடம்பெயர்கின்ற மக்கள் வவுனியாவுக்கு வந்து தங்குவதற்கான சூழ்நிலை தற்போதைக்கு இல்லை என்று யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை என்றும் ஆயர் தெரிவித்தார்.

கத்தோலிக்க திருச்சபையின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்புக்குச் சென்ற ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் (12ஆம் பக்கம் பார்க்க)



## நாச்சிக்குடா கடல் பகுதியில் படையினர்-புலிகள் மோதல்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு கரையோரத்தில் நாச்சிக்குடா பகுதியில் வலைப்பாடு கடற்பரப்பில் இரணை தீவுக்கு அருகில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் 4 மணித்தியாலங்கள் கடும் சண்டைகள் நடைபெற்றதாகவும் இச் சண்டைகளில் 3 பெரிய படகுகள் உட்பட விடுதலைப் புலிகளின் 10 படகுகளை படையினர் அழித்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருக்கிறது.

நேற்றுப் பிற்பகல் 4 மணிவரையில் தொடர்ந்த இந்த மோதல்களில் 20 தொடக்கம் 30 வரையான (12ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சிக்கான உணவுப் பொருள்கள் ஒருவார காலமாக அனுப்பப்படவில்லை

### கிளி.அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்துக்கான உணவுப் பொருள்கள் கடந்த ஒரு வாரமாக அனுப்பி வைக்கப்படவில்லை. அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு அமைய ஐ.நா அமைப்புகளும் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் வன்னிப் பகுதியில் இருந்து வெளியேறிய பின்னர் உலக உணவுத்திட்டத்தின் மூலம் அனுப்பப்படுகின்ற ட்ரக் வண்டிகள் உணவுப் பொருள்களை கொண்டுவரவில்லை. அதற்கான அனுமதி படையதிகாரிகளால் வழங்கப்படவில்லை என கிளிநொச்சி அரச அதிபர் என். வேதநாயகம் தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னேரியில் மோதல் 25 படையினர் உயிரிழப்பு

### விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னேரிப் பகுதியில் படையினரின் நடவடிக்கைக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 25 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 85 படையினர் காயமடைந்துள்ளனர். படையினரின் இரு உடலங்கள் உட்பட படையப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வன்னேரிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை படையினர் தாக்குதல் நடவடிக்கையொன்றினை பெருமெடுப்பில் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் மேற்கொண்டனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பிரதேசத்தில் நேற்றும் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்து சண்டையிட்டு வரும் அதேவேளை விமானப் படையினரும் வான்வழி தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சும் இராணுவமும் தெரிவிக்கின்றன.

வன்னியில் விசுமடுவுக்கு அருகே பிரமந்தன்குளம் என்னுமிடத்தில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படும் தளத்தில் விடுதலைப் புலிகள் பொருத்தியிருந்த விமான எதிர்ப்பு பொறி முறை (12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தங்கியுள்ளவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்தவே பொலிஸ் பதிவு

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்

(கொழும்பு)

வடக்கு மோதல்கள் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வன்னி மற்றும் மன்னார் மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது கொழும்பிலும் மேல் மாகாண பொலிஸ் பிரிவுகளிலும் தற்காலிகமாக வசிக்கும் பொதுமக்கள் தொடர்பான கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு அவர்களை பதிவு செய்ய பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தகவல் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் கூறியதாவது,

வடக்கு மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் மீது கிளைமோர்த் தாக்குதல் மூவர் பலி; மூவர் படுகாயம்

### புளியங்குளத்தில் சம்பவம்

(கிளிநொச்சி)

வவுனியா வடக்கு புளியங்குளம் புதூர் பகுதியில் பயணிகள் பஸ் மீது படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். மூவர் படுகாயமடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

கண்டி வீதியில் உள்ள புளியங்குளம் புதூர் சந்தியில் நேற்றுக் காலை 8.10 மணியளவில் பயணிகள் பஸ் மீது படையினர் கிளைமோர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதில் மூவர் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயமடைந்தனர். லலிதாராணி (வயது 28) கேதீஸ்வரன் (வயது 28), செல்வநாயகம் (வயது 48) (12ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றிவளைப்புத் தேடுதல்களில் தெற்கில் 155 பேர் கைதாகினர்

(கொழும்பு)

வெள்ளவத்தை, நுகேகொட மற்றும் பிலியந்தலை பகுதிகளில் 155 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 12 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து பொலிஸார் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை இந்தத் தேடுதலை மேற்கொண்டனர்.

இத் தேடுதலில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறிய வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள வெள்ளவத்தைப் பொலிஸார் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

**நுகேகொடவில்**

நுகேகொடயை (12ஆம் பக்கம் பார்க்க)

# நிக்கொட்டின் நிதியுதவியில் பெறப்பட்ட மூன்று அம்புலன்ஸ் வண்டிகள் கையளிப்பு

நிக்கொட் நிதியுதவியுடன் 13 மில்லியன் ரூபாய் பெறுமதியான 3 அம்புலன்ஸ் வண்டிகள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினூடாக கோண்டாவில், அளவெட்டி மற்றும் பண்டத்தரிப்பு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டது.

இம் மூன்று அம்புலன்ஸ் வண்டிகளும் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு நேற்று வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கையளிப்பு விழாவில் யாழ்.அரச அதிபர் க. கணேஷ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அம்புலன்ஸ் வண்டிகளின் திறப்புகளை வைத்திய அதிகாரிகளிடம் வழங்கினார்.

அத்துடன் இந் நிகழ்வுக்கு நிக்கொட்டின் உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவரூபனும் கலந்து கொண்டார். இவ் அம்புலன்ஸ் வண்டிகளை அளவெட்டி வைத்தியசாலை சார்பில் வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி ஐ.ராதையனும் கோண்டாவில் வைத்தியசாலை சார்பில் வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி வி.கனகரட்ணமும் பண்டத்தரிப்பு வைத்தியசாலை சார்பில் வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி ரி.திருத்தேவியும் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் நிக்கொட் நிறுவனத்தின் உதவியுடன் ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களும் இந் நிகழ்வில் வழங்கப்பட்டது. நிக்கொட் நிறுவனத்தினால் 15 மில்லியன் ரூபாய் பெறுமதியில் இருதயத் துடிப்பு அவதானிக்கும் கருவிகள், எக்ஸ்-கதிர் இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன மருத்துவ உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாகவும் இவை தெல்லிப்பழை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகளுக்கும் காரைநகர்ப் பிரதேச வைத்தியசாலைக்கு பல் மருத்துவ உபகரணங்களும் வழங்கப்படவுள்ளது.

இதிலிருந்து ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டது. அத்துடன் சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பின் நிதியுதவியுடன் 10 மில்லியன் ரூபாய் செலவில் பருத்தித்துறை ஆதார வைத்தீயசாலைக்கு நவீன எக்ஸ்-கதிர் இயந்திரம் கொழும்பில் வாங்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அது எடுத்து வரப்பட்டு வைத்தியசாலைக்கு வழங்கப்படும் எனவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டார். (ச-5)

# புலிகளின் விமானிகள் குறித்து ஆராய்ந்து வரும் அரச தரப்பினர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் விமானிகளின் திறன் குறித்து அவற்றை கலைத்துச் சென்று தாக்குதல் நடத்த விரைந்த விமானப் படையினரின் மூலம் தெரிந்து கொண்டுள்ள அரச புலனாய்வு வட்டாரங்கள் இவ்வளவுக்குப் புலிகள் எவ்வாறு விமானம் ஓட்டப் பயிற்சி பெற்றார்கள் என்பது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகப் படைத் தரப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இது தொடர்பில் அறிய வருவதாவது, வவுனியாப் படைத்தளம் மீது தாக்குதல் நடத்த வந்த புலிகளின் விமானங்களைக் கலைத்துச் சென்று தாக்குவதற்குக் கொழும்பிலிருந்து சென்ற வான் படையின் எவ்.-7 விமானங்கள் அந்த இருட்டு வேளையிலும் ஒருவாறு புலிகளின் விமானங்களைக் கண்டுவிட்டன.

தனது விமான கண்காணிப்பு எல்லைக்குள் அரச விமானம் வந்து விட்டதை அறிந்து கொண்ட புலிகளின் விமானி தனது விமானத்தைத் திடீரென கரணம் அடிக்கச் செய்து அரச விமானத்தின் தாக்குதலிலிருந்து தப்பியுள்ளார்.

அதேபோல வவுனியாப் படைத் தளம் மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த புலிகளின் விமானம் அங்கு விமானப் படையின் எவ்.-7 தாக்குதல் விமானம் வந்தவுடன் உடனேயே முல்லைத்தீவுக்குத் திரும்புவது போல பாசாங்கு செய்து விட்டு முல்லைத்தீவு நோக்கி அரைவாசித் தூரம் சென்று விட்டு திடீரெனத் திரும்பி வந்து வவுனியாக் கூட்டுப் படைத் தள அதிகாரி நிர்மல தர்மரட்ணவின் அதிகாரபூர்வ இருப்பிடத்தின் மீது குண்டொன்றை வீசிச் சென்றுள்ளது.

இதுபோன்ற நுணுக்கமான வான் படை போரியல் முறைகளை இவ்வளவு நேர்த்தியாகப் புலிகள் எங்கு பயிற்சி பெற்றார்கள் என்பது குறித்து அரச புலனாய்வு வட்டாரங்கள் ஆராய்ந்து வருகின்றன.

படைத் தரப்பு வட்டாரங்களிலிருந்து பேசவல்ல அதிகாரி ஒருவர் கூறுகையில்,

வவுனியா தாக்குதலைப் பொறுத்தவரை அங்கு தாக்குதல் நடத்த வந்த புலிகளின் விமானத்தைச் சுட்டுவீழ்த்தச் சென்ற வான் படை விமானியை விட புலிகளின் விமானி மிகவும் சமர்த்தியமானவர் என்று குறிப்பிட்டுள்ளார். (ச-5)





நிக்கொட் அமைப்பின் நிதியுதவியில் கொள்வனவு செய்யப்பட்ட அம்புலன்ஸ் வண்டிகள் கையளிப்பு நிகழ்வில், யாழ். அரச அதிபர் க.கணேஷ், அம்புலன்ஸ் வண்டியின் திறப்பை கையளிப்பதையும் அருகில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், நிக்கொட்டின் உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவரூபன், ஆகியோரை முதல் படத்திலும் கையளிக்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டிகளை மற்றைய படத்திலும் காணலாம்.

# இராமநாதன் நுண்கலைக் கழகம் தரம் உயர்த்தப்பட வேண்டும்

## மானிய ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கழகத்தை இராமநாதன் பல்கலைக் கழகமாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டின் போதே அவர் இதனைக் கூறினார்.

தமிழ் மக்களின் கலை கலாசார உயர் விழுமியங்களைப் பேணும் இராமநாதன் நுண்கலைக்கழகம் தனித்துவமான ஆற்றுகை மற்றும் கட்புலத்திறன் கொண்ட பல்கலைக்கழகமாகக் தரம் உயர்த்தப் படவேண்டும் என்பதற்கு மறுப்பில்லை.

முதலில் அதனை நிறுவனமாக்கி பின்னர் வளாகமாக, பல்கலைக்கழகமாக படிப்படியாக தரமுயர்த்தப்பட வேண்டும்.

அதற்கான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு மானியங்கள் ஆணைக்குழு தயாராக உள்ளது என அவர் கூறினார்.

தனது பதவிக்காலத்தில் இதற்கான நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்வதாகவும் அவர் உறுதியளித்துள்ளார். (எ)

# கலைப்பீடத்தை இரு பீடங்களாக இயங்க வைப்பதற்கு இணக்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தை இரண்டு பீடங்களாக இயங்க வைப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் மனிதப் பண்பியல் பீடம், சமூக விஞ்ஞானபீடம் என இருபீடங்களாக கலைப்பீடம் இயங்கவுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த துறைத் தலைவர் மற்றும் பீடாதிபதிகளின் கூட்டத்தில் வைத்து மேற்படி இணக்கத்தை தெரிவித்தார்.

இதேவேளை கலைப்பீடத்தை இரண்டு பீடங்களாகச் செயற்படுத்துவதுகுறித்துவிரைவில் ஆராயப்படவுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

# பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி, எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன். உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த மூன்று நாள்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும்.

இச் செபத்தைப் பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி! (1681)

# அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் வெள்ளிப் பதக்கம் பெற்று வரலாற்றுச் சாதனை

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தின் ஊர்காவற்றுறை கல்விக்கோட்ட பாடசாலைகளில் ஒன்றான அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் 1 சி பாடசாலையாகும்.

தரம் 6-13 வரை 300க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவ் ஆண்டு நடைபெற்ற மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியின் தனி நிகழ்வுகளில் ஒன்றான பத்தொன்பது வயதின் கீழ்ப்பிரிவு ஈட்டி எறிதல் நிகழ்வில் செல்வன் திருச்செல்வம் கஜேந்திரன் இரண்டாம் இடம் பெற்று தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டி நிகழ்வுக்குத் தெரிவாகியுள்ளார். இம் மாணவன் மாகாண மட்டத்தில் மேற்படி நிகழ்வில் இரண்டாம் இடம்பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார். 1860ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை 148 வருடத்தின் பின் தேசிய மட் டம் வரை சென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

இம்மாணவனின் இச் சாதனையானது பாடசாலைக்கும் தீவக கல்வி வலயத்திற்கும் யாழ். மாவட்டத்திற்கும் வட மாகாணத்திற்கும் பெருமை சேர்ந்துள்ளது.

இம் மாணவனை தீவக கல்வி வலயம், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அனலை வாழ் மக்கள் அனைவரும் பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றனர். (ச)

# இன்று ஒரு தகவல்

## வாழும் முறை

''நல்லதுக்குக் காலமில்லை'' என்று அலுத்துக் கொண்டார் ஒருவர். "ஏன் அப்படிச் சொல்றீங்க" என்று கேட்டேன்.

"நாம் பணிவாக நடந்து கொண்டால் அதை மற்றவர்கள் பலவீனமாக நினைக்கிறார்கள். நடைமுறையில் அது கஷ்டமாக இருக்கிறது" என்றார். அப்படியானால் இந்த உலகத்தில் நாம் எப்படி நடந்துகொள்வது? இதற்கு ஸ்ரீஇராம கிருஷ்ணர் என்ன கதை சொல்லியிருக்கிறார் என்று பார்ப்போம்.

ஒருநாள் ஒரு பிரம்மச்சாரி புல்வெளியால் நடந்து போய்க் கொண்டிருந்தார். அவரைப்பார்த்ததும், அங்கே மாடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவர்கள் சிலர் ஓடி வந்தார்கள்.

"சுவாமி! அந்தப்பக்கம் போகாதீர்கள்! அங்கே ஒரு விஷப்பாம்பு இருக்கிறது. அந்த வழியால் போனால் கடித்து விடும்!" என்றனர்.

"பாம்பு தானே! பரவாயில்லை! எனக்கு சில மந்திரமெல்லாம் தெரியும்! அதனால் பயமில்லை!" என்று சொல்லிவிட்டு நேராகப் போய்க் கொண்டிருந்தார்.

"இவர் என்ன? ஆபத்தை விலை கொடுத்து வாங்கப் போகிறார் போல" என்று நினைத்துக்கொண்டு அந்த சிறுவர்கள் தூரத்தில் நின்றனர்.

இவர் மட்டும் போய்க்கொண்டே இருந்தார். சிறிது தூரம் போனதும் அந்தப் பாம்பு சீறிக்கொண்டு படம் எடுத்தது!

அதைப்பார்த்ததும், இவர் ஒரு மந்திரத்தை சொன்னார். அவ்வளவுதான்! அது ஒரு மண்புழு மாதிரி இவர் காலடியில் வந்து படுத்துக் கொண்டது. இவர் அதற்கு உபதேசம் செய்தார்.

"நீ ஏன் இப்படி எல்லோருக்கும் கெடுதல் செய்கிறாய்? நான் உனக்கொரு மந்திரம் சொல்லித் தருகிறேன். அதை நீ எப்பொழுதும் சொல்லிக் கொண்டேயிரு! உன்னிடமுள்ள கெட்ட குணங்களெல்லாம் மறைந்து கடவுள் தரிசனம் உனக்குக் கிடைக்கும்" என்றார்.

பாம்பும் சரியென்று அதைக் கற்றுக்கொண்டு தன்னிடமுள்ள கெட்டகுணத்தையெல்லாம் விட்டுவிட்டது. யாரையும் கடிப்பதில்லை! இது தெரிந்தவுடன் அங்கே மாடு மேய்க்கும் சிறுவர்களுக்கு துணிச்சல் வந்துவிட்டது. அதைக் கண்டால் கல்லெடுத்து எறியத் தொடங்கினார்கள். அந்தப் பாம்பு எல்லாத் துன்பத்தையும் சகித்துக் கொண்டது. அதற்கு இப்பொழுது கோபமே வருவ தில்லை.

இதைப் பார்த்ததும் சும்மா இருக்கமுடியாமல், ஒரு பையன் அதற்கு அண்மையில் போய் அதன் வாலைப் பிடித்து தூக்கி தலைக்கு மேல் சுற்றினான். ஓங்கி தரையில் வீசினான். அந்தப்பாம்பு மூர்ச்சையாகிவிட்டது.

பின்னர் மிகவும் சிரமப்பட்டு வளைக்குள் போய் விட்டது. வெளியே வருவதில்லை. மிகவும் மெலிந்து விட்டது. யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யாமல் வாழ்ந்து கொண்டிருந்தது.

ஒரு வருஷத்துக்குப் பின் அந்தப் பெரியவர் மீண்டும் அந்த வழியாக வந்தார். பாம்பைப் பார்த்தார். "ஏன் இப்படி மெலிந்து போய்விட்டாய்?" என்று கேட்டார். "இலை. பழம் மட்டும் தானே சாப்பிடுகிறேன். அதனால் தான் இப்படி இருக்கிறேன்" என்றது பாம்பு.

"சிறுவர்கள் உனக்குத் தொந்தரவு செய்வதில்லையா?" என்று கேட்டார். "சிறியவர்கள் ஏதோ தெரியாத்தனமாக அப்படி செய்து விட்டார்கள்!" என்றது.

பாம்புக்கு அந்தளவுக்கு பக்குவம் வந்துவிட்டது. அதற்கு அந்தப் பெரியவர், யாரையும் கடிக்க வேண்டாம் என்று தானே உன்னிடம் சொன்னேன்! சீறி பயமுறுத்த வேண்டாம் என்று சொல்லவில்லையே! யாராவது தொந்தரவு செய்தால் அவர்களை சீறி உன்னை நீ பாதுகாக்க வேண்டாமா? என்றார்.

இதன் மூலம் ஸ்ரீராமகிருஷ்ணர் என்ன சொல்கிறார் என்றால் "நீ மற்றவர்களுக்கு கெடுதல் செய்யாதே! ஆனால் நீ இந்த உலகத்தில் வாழும் போது மற்றவர்களுக்கு அச்சமும் மரியாதையும் ஏற்படும் வகையில் நடந்து கொள்!" என்கிறார்.

இந்தத் தகவலைக் கேட்ட சினிமா டைரக்டர் ஒருவர் என்னிடம் வந்து, "சேர்! பாம்புக்கும் எனக்கும் ஒரு ஒற்றுமை உண்டு!" என்றார். "என்ன?" என்று கேட்டேன். "பாம்பு படமெடுத்தாலும் பார்ப்பவர்கள் ஓடி விடுவார்கள்! நான் படம் எடுத்தாலும் பார்ப்பவர்கள் ஓடி விடுகிறார்கள்!" என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# அரசும் அரச ஊழியர்களும் தமிழ் மக்களுக்கு பாகுபாடற்ற சேவையை வழங்க வேண்டும்

## மனித உரிமை ஆணையகத் தலைவர் புஞ்சிஹேவா

(பதுளை)

'நாட்டில் தமிழ் மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் அரசும் அரச ஊழியர்களும் பாகுபாடற்ற சேவையைத் தொடர்ந்தும் வழங்க வேண்டும் அதன் மூலமே நாட்டின் ஒருமைப்பாடு உறுதிப்படுத்தப்படும்'

இவ்வாறுமனிதஉரிமைஆணையகத் தலைவரும்சிரேஷ்ட சட்டத்தரணியுமானநிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி அரச ஊழியர் சங்க 54ஆவது வருடாந்த மாநாடு அண்மையில் பதுளை நூலக சேவை கேட்போர்கூடத்தில் நடைபெற்ற போதே சிரேஷ்ட சட்டத்தரணி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்,

அரச ஊழியர்களிடையே சம்பள முரண்பாடுகள் பல்வேறு வகைகளிலும் நிலவிக் கொண்டிருக்கின்றன. இதற்கானசுமூக நிலையும் இணக்கப்பாடும் ஏற்பட வேண்டியது அவசியமாகும். தற்போதைய நிலையில் இது தொடர்பில் பல்வேறு மட்டங்களில் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

கட்டுப்பாடுகளை எவரும் மீறுவது கூடாது. இவற்றினைத் தொடர்ந்தும் பேணிப்பாதுக்காக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

தற்போது தேவையற்றவகையில் அரச திணைக்களங்களின் ஒரு பிரிவினர்வேலைநிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். இவைகள் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும் என்றார்.

ஊவா மாகாண சபைத் தலைவர் மானெல் ரட்னாயக்க கூறுகையில்' சிவப்பு வர்ணம் தொழிலாளர்களின் உரிமையை வென்றெடுக்கும் நிறமாகஇருந்தது. ஆனால் இன்று இந் நிறம் இனவாதத்தையும் மார்க்ஸிசவாதத்தையும் ஒன்றிணைத்து பல்வேறுமுறுகல் நிலையினைத்தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது' என்றார்.

விவசாயதோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம். கிருஸ்ணசாமி தெரிவிக்கையில்;

தொழிற்சங்கங்கள் ஊழியர்களுக்கு நன்மைசெய்யும் நிலை இன்று மாறி விட்டது. இன்றைய தொழிற்சங்கங்கள் அனைத்துமே அரசியலில் சங்கமமாகி விட் டன. அதனாலேயேஅத் தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களுக் கென்று குரல் கொடுக்க தயக்கம் காட்டுகின்றன. இடது சாரித் தலைமைகள் ஆரம்பத்தில் நல் நோக்கத்துடனேயே செயற்பட்டன. அதனால் மக்கள்அவர்களைப் போற்றினர் ஆனால்இன்று அவைதமது இலட்சியத்தையும் நோக்கத்தையும் மறந்து அரசாங்கத்தின் காலடியில் மண்டியிட்டுக் கிடக்கின்றன. இடது சாரிகள் நிலை தடுமாறியதால் மக்கள் அவர்களைவிட்டகன்றுள்ளனர். (அ-6)

# உள்ளூராட்சி மாகாணசபை தேர்தல் திருத்தத்திற்கு 2010க்கு முன்னர் அனுமதி பெறுவதற்கு ஏற்பாடு

## உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த உள்ளூராட்சி மாகாண சபைத் தேர்தல் திருத்தங்களுடனான சட்ட மூலத்திற்கு 2010 ஆம் ஆண்டுக்கு முன்னதாக பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு அர சாங் கம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதுடன் உள்ளூராட்சி, மாகாண சபை தேர்தல்கள் மறுசீரமைப்பு தொடர்பான கோவையை (விசேட ஏற்பாடுகள்) அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தேர்தல்களை மறுசீரமைப்பது தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை மற்றும் யோசனைகளின் பிரகாரம் உள்ளூராட்சி, மாகாணசபை தேர்தல் முறைமைகளில் திருத்தங்களை கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் உள்ளூராட்சி மாகாண சபைகளுக்காக தொகுதி முறையை மையப்படுத்திய தேர்தல் ஒன்றை அறிமுகப்படுத்தி அதில் 70 வீதமான உறுப்பினர்கள் தொகுதி முறையிலும் 30 வீதமான உறுப்பினர்கள் விகிதாசார முறையிலும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவுசெய்தல்.

உள்ளூராட்சி மன்றங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளில் அந்தந்த உள்ளூராட்சி மாகாண சபைகளின் (நகர சபைத் தலைவர் , நகர சபை உபதலைவர், தலைவர், உபதலைவர்) தெரிவு செய்யப்படுவர்.

இதற்கு மேலதிகமாக இந்த திருத்தங்களுக்குள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக உள்ளூராட்சி மாகாண சபை மட்டத்தில் தொகுதிக்குழு ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் அவதானத்தை செலுத்தியுள்ளது. அந்தந்த தொகுதிகளுக்காக தொகுதியை மையப்படுத்தி தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் தலைமையின் கீழ் இந்த குழுவின் உறுப்பினர்கள் அந்த பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக் கைகளை முன்னெடுப்பர்.

அடுத்த உள்ளூராட்சி மாகாண சபைத் தேர்தல் 2010ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற நிலையில், அதற்கு முன்னதாக திருத்தங்களுடனான சட்டமூலத்திற்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக் கொள்வதோடு,உள்ளூராட்சி மாகாணசபை தேர்தல்கள் மறுசீர மைப்பு தொடர்பான கோவை விசேட ஏற்பாடுகள்) அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# இராசி பலன்

19.09.2008
(புரட்டாதி 03, வெள்ளிக்கிழமை)
பரணி முன்னிரவு 08.13 மணிவரை
சதுர்த்தி முற்பகல் 09.12 மணிவரை
இராகுகாலம்-10.33-12.03 மணிவரை
சுபநேரம்-06.03-07.33 மணிவரை
மஹாபரணி

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், சிந்தனை மிகுதி, தெய்வதரிசனம், விருந்து பசாரம். |
| இடபம் | காரிய அலைச்சல், சோம்பல் நிலை, பிதாசிந்தை, தனவிரயம். |
| மிதுனம் | தெய்வதரிசனம், தொழில் வருமானம், காரிய அனுகூலம், உடல் நலம். |
| கடகம் | ஆரோக்கியமான நிலை, நன்கொடை, எடுத்த, காரியம் கைகூடும், மேன்மை. |
| சிங்கம் | தேகாந்திரவாசம், உத்தியோக பங்கம், வீண்பயம், முயற்சி தாமதம். |
| கன்னி | மனக்கவலை, பிரயாண பயம், திடீர் நன்மை, போசன சுகம். |
| துலாம் | மனோதைரியம், கீர்த்தி, தேக நலன், தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | சுவாரஸ்யம், சத்துருஜெயம், முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |
| தனுசு | வியாபார நன்மை, அஜீரண ரோகம், குடும்பக்கவலை, முயற்சி தாமதம். |
| மகரம் | தன்னம்பிக்கை குறைவு, பெரியோர் உதவி, தனவிரயம், தெய்வசிந்தை. |
| கும்பம் | நற்கீர்த்தி, காரிய அனுகூலம், தெய்வதரிசனம், பிரயாண நன்மை. |
| மீனம் | மனோசங்கடம், போசன சுகக் குறைவு, தனவிரயம். |

வளவன்

# இலங்கையில் யுத்தம் முடிவுறுவதை சில நாட்டு சக்திகள் விரும்பவில்லை

## மல்வத்து பீட மாநாயக்கர் தெரிவிப்பு

சில வெளிநாட்டு சக்திகள் வடக்கில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதனை விரும்ப வில்லை என கண்டி மல்வத்து பீட மாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தம் முடிவுறுத்தப்பட்டால் அதன்பின்னர் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகளுக்கு தலையீடு செய்ய முடியாமையினால் சில நாடுகள் யுத்தம் தொடரவேண்டும் என விரும்புவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாய அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, விவசாய அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார மற்றும் மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப் பேகடுவ ஆகியோர் மாநாயக்கரைச் சந்தித்த போது இந் தக்கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சில வெளிநாட்டுச் சக்திகள் இலங்கை உள்விவகாரங்களில் தலையீடு செய்து பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இப் பிரச்சினைக்குத் தீர்வுபெற்றுக் கொடுக்க அரசாங்கம் முனைப்புடன் செயலாற் றும் போது ஏனைய சக் திகள் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாநாயக்க தேரர் மேற்கோள் காட்டி சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## சிறுவர் கதை ஆக்கப் பிரிவில் இரண்டாம் இடம்



கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சினால் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் யாழ் பொதுசன நூலகத்தில் கடமையாற்றும் நூலக சேவகர் சேவையைச் சேர்ந்த ஜோர்ஜ் ஜெஸ்ரின் சிறுவர் கதை ஆக்கப் பிரிவில் 02 ஆம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

இவருக்குரிய விருதும் சான்றிதழும் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த திரையரங்கில் கலாசார அலுவல்கள் மரபுரிமை அமைச்சரின் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-51)

## கல்விக் கண்காட்சி

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய ஆரம்ப, இடைநிலை, உயர்நிலைக் கல்வி கண்காட்சி 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11.45 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன், சிறப்பு விருந்தினராக தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவபாதம், கௌரவ விருந்தினராக நெடுந்தீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அரசரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். ஓ

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வண்ணார்பண்ணை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான (A.R.V) விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி இன்றுவெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை சீனியர் ஒழுங்கை, வீரகத்திப்பிள்ளையார் கோவிலடியிலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணி வரை நாவலர் வீதி,வைரவர் கோவிலடியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொள்கின்றார். ஓ




## பகவத்கீதை உபந்நியாசம்

கோண்டாவில் கிழக்கு நாராயண வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறும் ஆத்மீக நிகழ்வு இன்று 45 ஆவது வாரமாக இடம்பெறுகிறது. மாலை 4.30 மணிமுதல் 6 மணிவரை இடம்பெறும் இந்நிகழ்வில் பஜனாமிர்தம், திவ்வியநாமவளி அர்ச்சனை, ஆராதனை, தியானம், நற்சிந்தனை ஆகியவற்றுடன் கீதோபதேச வித்தகர் எஸ்.கே.என்.தவராஜா (ஜே.பி)யின் பகவத்கீதை உபந்நியாசமும் இடம்பெறும். ஆத்மீக ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றது பகவான்ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபா. ஓ


# நல்லூர் பிரதேச சபையின் கமநெகும திட்ட வேலைகள்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையினரால் கமநெகும வேலைத் திட்டத்தின் கீழ் கோண்டாவில் ஸ்ரேசனடி -நவரட்ணராஜா வீதி, கொக்குவில் காந்திஜி வீதி என்பவற்றில் மதகு வெட்டி அமைக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 18 இலட்சம் ரூபா பெறுமதியான இவ் வேலைத் திட்டங்கள் அடுத்த மாத ஆரம்பப் பகுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் நல்லூர் பிரதேச சபையின் மக்களை நோக்கிய பயணத்தின் அங்கமாக கமநெகும வேலைத்திட்டத்தில் மகாத்மாஜி மைதான வீதிக் கிணறு, முருகன் வீதிக் கிணறு, முருகன் கோவில் அம்மன் வீதிக் கிணறு, பாரதிபுரம் கிணறு ஆகிய நான்கு பொதுக் கிணறுகளும் துப்புரவாக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் எம்.ஜே.சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (ஓ-36)

## பொலிஸாரால் கைப்பற்றிய கடலாமைகள் மீண்டும் கடலினுள் விடப்பட்டது



சுழிபுரம் கடல் பகுதியில் அருகி வருகின்ற கடல்வாழ் உயிரினங்களில் ஒன்றாகவும் கடலில் பிடிப்பதற்கு அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டதுமான இரண்டு கடலாமைகளை கடந்த 12ஆம் திகதி பிடித்து ஒரு வீட்டினுள் பதுக்கிவைத்திருந்தனர்.

அவ்வீட்டில் கசிப்பு வடிக்கும் செய்தி அறிந்து அவ் வீட்டினை சோதனையிட்ட வட்டுக்கோட்டை மாவடி இராணு வத்தினரும் வட்டுக்கோட்டை பொலிஸாரும் அவ்வீட்டில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த இரண்டு கடலாமைகளையும் கைப்பற்றியதுடன் இரண்டு சந்தேக நபர்களையும் கைதுசெய்தனர்.

மாவடி இராணுவத்தினரின் உதவியுடன் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட இரண்டு கடலாமைகளும் நேற்று மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன. ஒப்படைக்கப்பட்ட இரண்டு கடலாமைகளையும் மீண்டும் கடலினுள் விடுமாறும் ஆமைகளை பிடித்து வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்களுக்கும் முப்பதாயிரம் ரூபா தண்டப் பணமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. பின்னர் இரண்டு கடலாமைகளும் மாதகல் கடற் பிரதேசத்தினுள் பாதுகாப்பாக விடப்பட்டன. (அ-27)

# யாழ்ப்பாணக் கல்லூரியில் டெனிஸ் இறுதிப் போட்டி



லூதர் ஜேம்ஸ் செல்வராஜா

(வட்டுக்கோட்டை)

வட்டு. யாழ்ப்பாணக் கல் லூரியில் இ.ச.பேரம்பலம் சக நிறுவன அனுசரணையுடன் நடாத்தப்படும் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள், பெரியோர்கள், தனி நபர் களுக்கான டெனிஸ் சுற்றுப் போட்டியின்இறுதிப் போட்டியும் பரிசளிப்பும் நாளை காலை9 மணியளவில் கல்லூரி மைதானத்தில் கல்லூரியில் முதல்வர் என்.ஏ. விமலேந்திரன் தலைமையில்நடைபெறவுள்ளது.

இப்போட்டி கல்லூரியில் மாணவனாகவும் ஆசிரியராகவும் கடமையாற்றி சிறந்த டெனிஸ் விளையாட்டு வீரனாக விளங்கி கல்லூரி மைதானத்தில் டெனிஸ் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் மரணித்த லூதர் ஜேம்ஸ் செல்வராஜா ஞாபகார்த்தமாக 1980 ஆம் ஆண்டு முதல் கல்லூரி விளையாட்டுத் துறையினரால் சுற்றுப் போட்டியாக நடாத்தப் பெற்று வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் இவ் விளையாட்டினை சகல தரப்பினரிடையேயும்வளர்க்கும் நோக்குடன்இச்சுற்றுப் போட்டி கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல்நடைபெற்றுவந்துள்ளது. அதன் இறுதிப் போட்டியே நாளை நடைபெறவுள்ளது. இவ் இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக இ.ச.பேரம்பலம் சக நிறுவன உரிமையாளர் பே.நாகரத்தினம், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் திருமதி நவமணி லூதர் செல்வராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-27)

## நவக்கிரக ஹோமசாந்தி

திருவருள் மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் புரட்டாதி மாத முதல் சனிக்கிழமையான நாளை காலை 9 மணியளவில் நவக்கிரக ஹோமசாந்தி நடைபெற உள்ளது. ஓ

## பேச்சுப் போட்டி

திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்படுகின்ற ''ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியார்கள்'' என்னும் தலைப்பிலான பேச்சுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9.30மணி முதல் 286, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பித்து -பங்குபற்றுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்ட அனைவரையும் குறித்த நேரத்திற்கு சமூகம் தருமாறு திருமறைக் கலாமன்றம் கேட்டுள்ளது.

இளந்தலைமுறையினரிடையே பேச்சாற்றலை வளர்க்கும் முகமாக நடாத்தப்படுகின்ற இப்பேச்சுப் போட்டியில் முதல் பரிசாக ''கலைமுகம்'' சஞ்சிகை வழங்குகின்ற ரூபா 10 ஆயிரமும் இரண்டாம் பரிசாக ''ஆற்றுகை'' சஞ்சிகை வழங்குகின்ற (ரூபா 5 ஆயிரமும்) வழங்கப்படவுள்ளதுடன் ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஓ

## 'கர்ணன்' திரைப்படம்

திருமறைக் கலாமன்றத்தின் திரைப்படப் பிரிவின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டு வருகின்ற திரைப் படங்களின் வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ''கர்ணன்'' திரைப்படம் கலையகத்தில் கலையகத் திரையிடப்படவுள்ளது.

அகலத்திரையில் இலவசமாக காண்பிக்கப்படவுள்ள இத் திரைப்படக் காட்சியை ஆர்வமுள்ள அனைவரும் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓ

## மீள்பரீட்சை விண்ணப்பங்கள்

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் சகல கற்கை நெறிகளுக்கான மீள் பரீட்சை விண்ணப்பங்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நிறுவன இயக்குநர் க.கதிரமலை கேட்டுக்கொள்கின்றார். ஓ

## உள்ளகப் பயிற்சி சான்றிதழ்

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மாணவர்களின் உள்ளகப் பயிற்சிக்கான சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இச் சான்றிதழ்களை மாணவர்கள் பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என இயக்குநர் க.கதிரமலை அறிவித்துள்ளார். ஓ

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

நீர்வேலி யா/அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசில் நாளும் எதிர்வரும்22ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் இ. குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சி.சித்திரவடிவேல், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம், கௌரவ விருந்தினராக யாழ் மாவட்ட சி.க. கூ. சமாச வெளிக்கள உத்தியோகத்தர் ந. சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

அத்துடன் யாழ். மத்திய கல்லூரி அதிபரும் பழைய மாணவருமான செ. பத்மநாதன் நிறுவுனர் நினைவுப் பேருரையை வழங்கவுள்ளனர். (ஓ-25)

## பொன் விழாவும் மலர் வெளியீடும்

வட இலங்கை சர்வோதய அறங்காவலர் சமூக சேவகி செல்வி. பொன். ஜமுனாதேவி ஜே.பி.யின் பொன்விழா நிகழ்வும் மலர் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில், யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை தலைவரும், விழாவுக் குழுத் தலைவருமான பேராசியர் கா. குகபாலன் தலைமையில் நடைபெற உள்ளது.


நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் கே.கணேஷ், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, 'சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வி. சிவசுவாமி, வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வேலணை பிரதேச சபை செயலாளர் கை. மகேந்திரலிங்கம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். ஓ



கமத்தொழில் அபிவிருத்தி, கமநலசேவைகள் அமைச்சின் சேதன பசளை ஊக்குவிப்பு வாரத்தினை முன்னிட்டு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விவசாய கருத்தரங்கில் தொல்புரம், காரைநகர், கமநல சேவைகள் நிலைய விவசாயப் போதனாசிரியர் செல்வி தி.கலைவதனா கருத்துரை வழங்குவதனையும், உதவி அரச அதிபர் இ.த. ஜெயசீலன்,நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகள் மற்றும் செயலக உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# நோத் முதல் கோபல்லவா வரை (103)



## முதலாம் மகா யுத்த காலம்

முதலாம் மகாயுத்தம் மூண்டெழுந்த காலத்தில் வல்லரசுகளின் குடியேற்ற நாடுகளிடையே விழிப்புணர்ச்சியுண்டாகிச் சுதந்திரம், சமத்துவம் என்பனவாதிய சனநாயக தர்மத்துக்காக மக்கள் குரலெழுப்பினர். பிரித்தானியாவின் செல்வத்துக்கு விளைநிலமாகவிருந்த பாரத நாட்டிலும் கலகங்கள் ஆரம்பித்தன.

இதுகாறும் இலங்கையில் இனப்பகை, வகுப்புக்கலவரம் என்பன உக்கிரமாக நடைபெறவில்லை. முன்னர் 1818 ஆம் ஆண்டிலும், 1848 ஆம் ஆண்டிலும் எதிர்க்கிளர்ச்சிகள் நடைபெற்ற போதிலும் அவை உள்நாட்டுக் கலகமாகவோ இனக் கலகமாகவோ இருக்கவில்லை. ஆனால் அன்று 28.5.1915 இல் வைகாசி விசாக நன்நாளிலே கண்டியில் உள்ள காசில் வீதியிலே ஒரு கலகம் ஆரம்பிக்க ஏதுவான ஒரு நிகழ்ச்சி நடைபெறலாயிற்று.

பௌத்தர்கள் தங்கள் புராதன கண்டி நடனம், ஆடல், பாடல் என்பன செய்து கறோல் என்னும் ஊர்வலங்கள் நடத்துவது வழக்கம். அது நெடும் பண்டைக்கால முதலாக நிகழ்ந்து வந்ததொரு விழாவணி. அன்று அவர்கள் காசில் வீதியில் இருந்த கனவான் ஒருவரைக் கௌரவித்துக் களிக்கு முகமாகத் தங்கள் கறோல் ஊர்வலத்தை அவ் வீதி வழியே திருப்பினார்கள். ஆனால் அவ்வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பள்ளிவாசலில் முஸ்லிம்கள் அந்த வேளையில் தொழுகை நடத்தினார்கள் என்ற காரணத்தால் பொலிசுக்காரர் ஊர்வலத்தை தடை செய்தார்கள். பொலிசுக்காரர் தடை செய்வதற்குள் ஊர்வலத்தின் முன் வரிசையினர் வேகமாக அவ்வழியே முன்னேறிவிட்டார்கள். ஆனால் பின்வரிசைக்காரர் மாத்திரம் வந்த வழியே திரும்பிப் போக வேண்டியவராயினர்.

### மீள் பார்வை

ஊர்வலக்காரரில் ஒரு சாரார் திரும்பிப் போவதைக் கண்ட தொழுகையாளர் ஊர்வலக்காரரை எள்ளி நகையாடிக் கைதட்டிச் சிரித்து மகிழ்ந்தார்கள். அவர்களுடைய மனோபாவத்தை அறிந்ததும் திரும்பிப் போன ஊர்வலக்காரர் அவ்வழியே மேல் நோக்கி பள்ளிவாசல் வழியாகத் தங்கள் மேளதாளங்கள் ஒலிக்க நடனங்கள் பாடல்களுடன் போனார்கள்.

இந்நிலையில் இருபக்கங்களிலிருந்தும் நிந்தனைகள், ஏச்சுக்கள், கூக்குரல்கள் ஒலித்தன. அவை உச்சநிலையடைந்தபின் கல்லெறிகள் தடியடிகள் இடம்பெற்றன. கலகம் பிறந்தது. அக் கலகம் அவ்வூர்வலத்தோடு அன்றிரவோடு ஆறியமையலாம் எனப் பெரியவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் நிலைமை வேறு வழியிற்றிரும்புவதாயிற்று.

கண்டியின் நாட்டுப் புறங்களில் வாழ்ந்த நல்ல சுபாவமுள்ள பௌத்தர்கள், அந்நிலைமையை வேறு விதமாக விளங்கினார்கள். அவர்கள் அதிகாலையிலேயே வீதி வழியே கூட்டங் கூட்டமாக நின்று தங்கள் புனிதமான புத்த தந்தக் கோயில் வேற்று மதத்தவரால் அழிக்கப்படலாம் என எண்ணி அஞ்சினர். அவர்கள் அச்சத்தை வேகப்படுத்தக் கூடியதொரு செய்தியும் அவர்களுக்குக் கிடைத்தது. அது கொழும்பிலிருந்து ஆயிரக் கணக்கான முரடர்கள் கோயிலை இடிப்பதற்காக வருகிறார்கள் என்பதாம். கேயிலிடிபட்ட பின் தாங்கள் வாழ்வதில் என்ன பயன் எனப் பௌத்தர் கண்ணீர் விட்டழுதனர். உண்மையில் பெருந்தொகையான முஸ்லிம்கள் கொழும்பிலிருந்து கண்டிக்குப் புறப்பட்டார்கள் என்றும் அவர்கள் கண்டியில் இறங்காது பொலிசாரால் திருப்பியனுப்பப்பட்டார்கள் என்றும் நாளடைவில் அறியவந்தது.

இதற்குள் பொலிசுப் பகுதியின் மேலதிகாரியாய டௌபிகன் பஞ்சாப்பியர் படையுதவியுடன் கலகக்காரரை அடக்கிவிட்டார் என்பது உத்தியோகபூர்வமான செய்தியாயிருப்பவும், ஊர்மக்கள் அதனை நம்பவில்லை. அவர்கள் புனிதக் கோயில் தரைமட்டமாக இடிக்கப்பட்டதாயும், பௌத்தர்களுடைய வீடுகள் தாக்கப்பட்டதாயும், பௌத்தமதப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாயும் அவர்கள் பொருள் பண்டங்கள் கொள்ளையடிக்கப்பட்டதாயும் பேசித் திரிந்தார்கள்.

இவ்வாறாகக் கண்டியில் ஏற்பட்ட கலகம் மின்னல் வேகத்தில் கொழும்பு, இரத்தினபுரி, மாத்தளையாகிய நகரங்களுக்கும் பரவிற்று. அவ் இடங்களிலிருந்து காட்டுத்தீ போல அது வடமாகாணம், கீழ்மாகாணம் ஆகிய இரு பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களிற் பரவியது. கொழும்பில் நடைபெற்ற கைகலப்பால் ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க இயலாது பொலிசுக்காரர் இடர்ப்பட்டனர்.

**க.சி.குலரத்தினம்**

இந்நிலையில் நுவரெலியாவில் ஓய்வெடுத்திருந்த ஆள்பதி சாமேஸ் அவர்களுக்கு இச் செய்தி 2.6.1915 இல் கிடைத்தது. அவர் உடனடியாகக் கண்டிக்குப் புறப்பட்டார். அவருடைய இலக்கியப் புலமை அவருக்கு நிலைமையை ஆற அமர விளங்கிக் கொள்ள உதவவில்லை. அவர் தம்முடைய பிரதம செயலாளரான ஸ்ரப்ஸ் அவர்கள் கூறியவற்றை அப்படியே நம்பினார். அன்றிப் பொலிசதிகாரியாய டௌபிகன் கூறியவண்ணமும் நடக்க அவர் ஆயத்தமானார். அவர்கள் இருவரும் அதனை அரசாங்கத்துக்கு எதிராக எழுந்த கிளர்ச்சி என்றே திரித்துக் கூறி விளக்கினார்கள். ஆள்பதியும் அவர்கள் கூற்றை நம்பிக்கொண்டார். (தொடரும்)



தென்புலோலி சிங்கைநகர் உயதசூரியன் முன்பள்ளி விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினரான பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் மாலையணிவித்து வரவேற்கப்படுவதையும், விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசை முழங்க அழைத்து வரப்படுவதையும், கிராம உத்தியோகத்தர் எஸ்.குமரகுருநாதன் உரையாற்றுவதையும், சனசமூக நிலையச் செயலாளர் செல்வி எஸ்.சிந்துஷா நன்றியுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-பரு.நிருபர்)

# தொல்லியல் நோக்கில் (9)

# கந்தரோடையும் கதிரமலையும்

ஆனால் இப்பெயர்கள் சிங்கள மொழிக்குரிய பெயர்களாக மாறுவதற்கு முன்னரே இலங்கையில் இடப்பெயர்களாக இருந்ததற்குப் பிராமிக் கல்வெட்டுக்களில் சான்றுகள் உண்டு.

இவை இலங்கையில் மட்டுமன்றி சமகாலத்தில் தமிழ்நாடு கேரளம், ஆந்திரம், கர்நாடகம் போன்ற தென்னிந்திய மாநில இடப்பெயர்களின் பொது விகுதியாக இருந்ததற்கு கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் சான்றுகள் உண்டு. இதற்கு உதாரணமாக ஆந்திராவில் புன்னகாமம், பிட்டுகாமம், நந்திகாமம் போன்ற இடப்பெயர்களைக் குறிப்பிடலாம்.

இவற்றின் காலம் கி.மு. 3ஆம்-2ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனத் தமிழ்நாட்டின் முதன்மைச் சாசனவியலாளரில் ஒருவரான ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டுள்ளார். (Mahadevan 1994) இம் மட்பாண்ட எழுத்துக்கள் சிலவற்றிற்கு திரு. கிருஷ்ணராஜா கொடுத்திருக்கும் வாசகத்தையிட்டு வேறுபட்ட கருத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருப்பினும் அவற்றுள் சில மட்பாண்டங்கள் தமிழ்ப் பிராமி எழுத்தில் எழுதப்பட்டிருப்பது பண்டுதொட்டு கந்தரோடையில் தமிழ் மொழி பேசிய மக்கள் வாழ்ந்ததற்குச் சான்றாகும்.

கந்தரோடையில் பெரும்பாலும் பௌத்த மதம் சார்ந்த சின்னங்கள் காணப்படும் சுற்றாடலில் இருந்தே இதுவரை பிராமிய எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. இக் காலத்தில் பௌத்த மதம் பரவிய நாடுகளில் எல்லாம் அம்மத மொழியான பிராகிருதத்தை எழுத வடபிராமி எழுத்தே பயன்படுத்தப்பட்டன. ஆனால் இலங்கையிலும், தமிழகத்திலும் தான் வட பிராமியுடன், தமிழ்ப்பிராமியும் பயன் படுத்தப்பட்டன. கந்தரோடையில் வடபிராமியுடன் (Indrapala 1973) தமிழ்ப்பிராமியும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை பண்டைய காலத்தில் தமிழருக்கும் பௌத்தமதத்துக்கும் இடையேயுள்ள தொடர்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இதைக் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தர், போதிசத்துவர் சிலைகள் , சந்திரவட்டக் கற்கள் என்பவற்றின் கலை மரபுகள் ஆந்திர, தமிழக, பௌத்த கலை மரபை ஒத்திருப்பதன் மூலம் மேலும் தெளிவாகின்றது.

இவ்வொற்றுமைகள் பண்டைய காலப் பௌத்தச் சின்னங்களைக் குறிப்பிட்ட ஓர் இனம் வாழ்ந்ததன் எச்சங்களாகப் பார்க்காது குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்து மறைந்த ஒரு மதத்தின் பண்பாட்டுச் சின்னங்களாகப் பார்க்கப்பட வேண்டும் என்பதை தெளிவாகச் சுட்டுகின்றன.

**நகரமயமாக்கமும் கந்தரோடையும்**

தென்னிந்தியாவைப் போல் இலங்கையிலும் நகரமயமாக்கம் (Urbanisation), அரச உருவாக்கம் (State formation) என்பன பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றன. (Ragupathy) 1987: 57:62) , இதற்கு இப் பண்பாட்டுடன் ஏற்பட்ட குளநீர்ப்பாசனம், சிறு தொழில்நுட்ப வளர்ச்சி (Micro -Technology), அயல் நாட்டு வர்த்தகத் தொடர்பு, எழுத்தின் பயன்பாடு என்பன அடிப்படையாக அமைந்தன எனலாம்.

இதில் அயல்நாட்டு வணிகத் தொடர்பு முக்கிய பங்கு வகித்தது. கந்தரோடையைப் பொறுத்தவரை நாட்டின் ஏனைய பிராந்தியங்ளைப் போல் அதன் அயல் நாட்டுத் தொடர்பு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஏற்பட்டதற்கான சான்றுகள் பரவலாகக் கிடைத்துள்ளன. இப் பண்பாட்டில் பெறப்பட்ட சில வகை மட்பாண்டங்கள், கல் வகைகள், மணிகள் தென்னிந்தியர், குறிப்பாக தமிழகத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவிற்கு கார்னேலியின் கற்கள் குஜராத்தில் இருந்தும், லேபஸ்லசுலி கற்கள் ஆப்கானிஸ்தானில் இருந்தும் இறக்குமதியாக்கப்பட்டு பின்னர் அங்கேயே மணிகள் செய்யப்பட்டன. (Rajan 1994:89) இற்கு கொடுமணலில் கிடைத்த மணிகள் சிறந்த சான்றாகும்.

இலங்கையில் பிறநாட்டிலிருந்து கற்கள் இறக்குமதியாக்கப்பட்டு பின்னர் இங்கேயே



உரோம நாணயம் கந்தரோடை

வடித்து எடுக்கப்பட்டதற்குச் சான்றுகள் இல்லை. இதற்கு மாந்தையில் கிடைத்த கல்மணிகளுக்கும் தமிழ் நாட்டில் அரிக்கமேடு, அழகன்குளம், காரைக்காடு ஆகிய இடங்களில் கிடைத்த மணிகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை குறிப்பிடத்தக்கது. (Bope Farachchi 1998:143-144 ) இதனால் கந்தரோடையில் பரவலாகக் கிடைத்த கல்மணிகள் தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை எனக் கூறுவதே பொருத்தமாகும். இதற்கு மாற்றீடாக கந்தரோடையிலிருந்து முத்து, இரத்தினம், யானைத்தந்தம் போன்ற பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதைக் கௌடில்யனின் அர்த்தசாஸ்திரத்தில் வரும் குறிப்புக்கள் உணர்த்துகின்றன.

பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் கந்தரோடையின் அயல்நாட்டு வர்த்தகம் இந்தியாவின் பரந்துபட்ட வட்டாரங்களுடனும், கிரேக்க, உரோம நாடுகளுடனும் நெருக்கமாக இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. (Begley 1973, Ragupathy 1987, கிருஷ்ணராஜா 1998) அவற்றுள் நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

கந்தரோடையில் பரவலாகக் கிடைத்து வரும் முத்திரை நாணயங்கள் (Punch-Marks Coins) கி.மு.4ஆம் -3ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் ஆட்சிபுரிந்த கண அரசுகளுடனும் மௌரிய அரசுடனும் கந்தரோடைக்கிருந்த நெருங்கிய வர்த்தகத் தொடர்பைக் காட்டுகின்றன. (சிவசாமி 1974), மௌரிய அரசு காலத்திலும், சற்றுப் பிற்பட்ட காலத்திலும் ஆந்திராவில்

**ரலாற்றுத் துறைப் பேராசிரியர்**
**ப. புஷ்பரட்ணம்**

ஆட்சிபுரிந்த சாதவாகன அரசும், தமிழகத்தில் ஆட்சிபுரிந்த சங்ககால பாண்டிய, சேர வம்சங்களும் வெளியிட்ட நாணயங்கள் கந்தரோடையில் கிடைத்திருப் பது தென்னிந்தியாவுடன் கந்தரோடைக் கிருந்த நெருங்கிய வர்த்தக, பண்பாட்டு தொடர்பைக் காட்டுகின் றன. (Seyone 1998, Krishnamurthy 1997, கிருஷ்ணராஜா 1998, புஷ்பரட்ணம் 2000) (தொடரும்)

# ஊர்காவற்றுறை புனித அந்தோ
# உடற்பயிற்சிப் போட்டியில் (

## வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஊர்காவற்றுறை, புனித அந்தோனியார் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு ஆண்கள் உடற்பயிற்சி அணியினர் 2008ஆம் ஆண்டிற்கான மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து முதன்மை அணியாகத் தெரிவு செய்யப் பட்டு தேசிய ரீதியில் நடை பெற்ற அகில இலங்கைப் பாட சாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியிலும் முதன்மை அணியாகத் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்ட விருதினைப் பெற்றுக் கொண்டமைக்காக உளமாரப் பாராட்டு கின்றேன்.

இன்றைய சூழலில் இவ்விருதினைப் பெறுவதற்கு உழைத்த அதிபர், ஆசிரியர்கள், அணியினைப் பயிற்று வித்த ஆசிரியர், பாடசாலைச் சமூகம், பங்குபற்றிய மாண வர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இது போன்ற தேசிய மட்டத்தி லான விருதுகளை எதிர்காலத்திலும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

சீ.இளங்கோவன் செயலாளர் கல்வி,
பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு வடமாகாணம்.

## யாழ். அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



இவ்வருட தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அணி உடற் பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்று 23 ஆண்டு களின் பின் யாழ்.மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள் ளது. யாழ்.மாவட்டத்தில் பல சிரமங்களுக்கு மத்தியி லும் இச் சாதனையை ஏற்படுத்திய மாணவர்களையும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த கல்லூரியின் அதிபர், உடற்கல்வி ஆசிரியர்,பயிற்றுவிப்பாளர் ஆகியோரின் முயற்சியையும், ஊக்கத்தை யும் பாராட்டுவதுடன், எதிர்காலத்திலும் சாதனைகள் பல புரிய வேண்டும்.

யாழ்.மாவட்டத்தின் சார்பில் ஏற்படுத்தியுள்ள சாதனை போற்றத்தக்கது. ஏனைய பாடசாலைகளும் இதனைமுன் மாதிரியாகக் கொண்டு விடா முயற்சி எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். வெற்றியீட்டிய அனைவருக்கும் மேலும் சாதனைகள் படைக்க இறைவன் ஆசி வேண்டு கின்றோம்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர் யாழ்.மாவட்டம்.

## தீவக வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி


ஊர்காவற்றுறை புனித அந்தோனியார்கல்லூரி உடற் பயிற் சியில் மாணவர்கள் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றமை தீவக கல்வி வலயத்திற்கு பெருமையும் புகழையும் தந்துள்ளது.

இக்கட்டான இன்றைய சூழ் நிலையிலும் தளராத முயற்சியோடு சாதனை படைத்த மாணவர்களைமனதார வாழ்த்துகின்றேன். மாணவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து அவர்கள் மகத் தானசாதனை படைக்க உந்து சக்தியாக இருந்த கல்லூரியின் அதி பர், பயிற்றுவிப்பாளர்அதனோடு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள், பெற் றோர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டுக் களை யும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விளையாட்டுத் துறையில் தீவக மாணவர்களின் திறனை வெளிப் படுத்தியுள்ள இச் சாதனை போன்று மென்மேலும் சாதனைகள் படைக்க இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

ஜி. வி. இராதாகிருஷ்ணன்,
வலயக்கல்விப் பணிப்பாளர், தீவகம் .வேலணை.

## 23 வருடங்களின் பின்
## பாராட்டி வாழ்த்தும்



இடமிருந்து வலமாக நிலத்தில் இருப்பவர்கள்:- A.அருள்பபில்ராஜ், S.லஸ்ரின், M

கதிரையில் இருப்பவர்கள்: M.சுயாந்(பயிற்றுவிப்பாளர்) T.றொபேசன்(ஆசிரியர்),வ

(விளையாட்டுப்பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் நிலத்தில்: A.கஜீபன், E. வினோத், T.அன்ரன் நிரோஜன், M. தோமஸ்தீ

A.டொமின்கோ, C. டரன்ஸ்அன்ரனி, B. ஆல்தோ, A.றொனால்ட்லக்சு

நிற்பவர்கள் கதிரையில்:-R.சந்திரகுமார், M. சஞ்சீவராஜ, A அலஸ், A. அனோஜ

## கல்லூரி அதிபரின் இ

யாழ்ப்பாணத்தின் பழம் பெரும் புகழ்பூத்த கல்லூரிகளுள் ஒன்றாக காவலூர் புனித அந்தோ
நீலக் கடலும் துள்ளியெழும் வெள்ளையலைகளும் இன்னிசைக் கீதம் பாட மங்காப்புகளோடு மாண
தவிக்கவிடப்பட்டு கற்றல் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்து. கட்டட அழிவுகள் ஒரு புறம் கற்றல்
மீண்டும் 1997 மார்ச் மாதம் 3ஆம் திகதி தன் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது. விரக்தி கொ
உடைமைகளையும் தொலைத்த சமூகத்தையும் உள்வாங்கி தன் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பி
வேண்டியதே அன்று பெரும் தேவையாக இருந்தது.



மீண்டும் பழைய நிலைக்கு கல்லூரியை இட்டுச் செல்வதற்கு பல
நாடகங்கள் வாயிலாகவும் கருத்தரங்குகள் வாயிலாகவும் விரக்திக்கு
பகுதியில் கல்வி, கலை, காலசாரம், விளையாட்டு என பல துறையில்
இருந்த படியாலும் நீண்ட காலமாக 98ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சி
கொண்டு செயற்படுத்தக் கூடிய உடற்பயிற்சி போட்டியை தெரிவு செ

இவ் வளர்ச்சியின் மைல்கல்லாக 2005ஆம் ஆண்டு மாவட்டத்தில்
தேசியம் வரை எமது புகழை நிலை நிறுத்தினோம். இவ்வாண்டிலிருந்து
கள் முதலிடத்தையும் பெற்றுக்கொண்டோம். போச் சூழல் காரணமாக 2
பயிற்சி குழுவை நாங்கள் தயார் செய்து மாவட்டம், மாகாணம் அனைத்
கான வாய்ப்பு இருந்த போதும் நாம் ஏமாற்றம் அடைந்தோம். இந்த ஏமாற்
கொடுக்க மேலும் சிறப்பாக செய்ய வேண்டும் என்ற உணர்வு மேலோ

இதனடிப்படையில் தான் இவ்வாண்டு இடம்பெற்ற சகல மட்ட போட்
யர் மடம் பாடசாலையில் இடம்பெற்ற தேசிய மட்ட போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் வெற்றி
யையும் தீவக கல்வி வலயத்தின் பெருமையையும் தேசிய மட்டத்தில் மீண்டும் ஒரு முறை தூக்
எமக்குத் தந்த ஊக்கமும் கரிசனையும் இவ் வெற்றியை நாம் பெற பக்கபலமாய் அமைந்தது.

இவ் வெற்றிக்கு உதுணையாக இருந்த அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோ
கொடுத்த ஊக்கமும் உந்து சக்தியும் போஷாக்கு உணவுகளும் மேலான தெம்பைக் கொடுத்தன.
இவ் உடற் பயிற்சி அணியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்ற திரு எம்.எவ். மெடோன், திரு ஏ.
கின்றேன். பிரதிபலனை எதிர்பாராமல் அர்ப்பணிப்பு நோக்கத்தோடு செயற்பட்ட இந்த பயிற்சியாளர்

குறிப்பாக இவ்வாண்டு தானாக முன் வந்து எம் அணியை பொறுப்பெடுத்து தனது இளமைத் துடி
தான் பெற்ற அனுபவங்கள் வாயிலாகவும் அணியை பயிற்றுவித்த செல்வன் சுயாந்தின் பணி அள
வரை எங்களோடு பயணித்த பொறுப்பாசிரியர் கே.சசிகுமார், ஆசிரியர் றொபேசன் பயிற்றுவிப்பாள
இருந்து செயற்பட்டமை மாணவர் மனதில் தெம்பை ஏற்படுத்தும் செயலாக இருந்தது. அவர்களுக்கு

2005ஆம் ஆண்டு இக் கல்லூரி பெற்றுக்கொண்ட தேசிய மட்ட 2வது நிலை வெற்றிச் சான்றித
கல்வியை பயின்று கொண்டிருக்கிற இவ்வேளையில் இவ்வாண்டு இம் முதல் நிலைச் சான்றிதழ் எம
மான பாதையை இது காட்டி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

வேலை உலகிற்கு மாணவர்களை தயார் படுத்தும் ஓர் அவசியத்தேவையின் காரணமாகவே இ
வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் சிறப்பாக தமது திறமையை களத்தில் வெளிக்காட்டி காவலூ
ஆழத்திற்கு நன்றி கூறுவதோடு அனைவரும் இதனால் பல சிறப்புக்களை பெற்று உயர்வடைய அ

PC PARK (PVT) LTD.
"கணனியுலகில் புதியதோர் பரிணாமம்"
உங்கள் அபிமானத்தை பெற்ற Pc Park நிறுவனம் தன் நிகரற்ற சேவையில் என்றென்றும் உங்களுடன்
Pc Park (Pvt)Ltd Technical Division Vaithiya Road, Dehiwala Hotline:0773951635
Pc Park (Pvt)Ltd 130A, Galle Road, Dehiwala T.P.0112714115- fax:01112713423
Pc Park (Pvt)Ltd 633 K.K.S.Road, Jaffna. T.P.021 222 9581 Fax:021 222 95 81
Pc Park (Pvt)Ltd Pointpedro Road, Nelliyadi.

ஆரம்பியுங்கள் சேமியுங்கள் வெல்லுங்கள்
மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி
யாழ்.மாவட்டத்தின் சார்பில் 23 வருடங்களின் பின் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்த காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி நாயகர்களை வாழ்த்துகின்றோம்
உங்கள் குடும்பத்தின் புதிய உறவின் வருகைக்கு முதலாவது அன்பளிப்பாக மக்கள் வங்கியின
இசுறு உதான அன்பளிப்புச் சீட்டு
கல்விச் சிறார்களின் வளமான எதிர்காலத்துக்கு
சிசு உதான கணக்கு
இளமைப் பராயத்தில் உயர் கல்வியைத் தொடரவும், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும
YES இளவயதினர் கணக்கு
பெறுமதியான பல்கலைக்கழக புலமைப் பரிசிலை வழங்கும்
YES FUTURE STARS கணக்கு
அதிஷ்டங்களை அள்ளித்தரும் மகளிருக்கான
வனிதா வாசனா கணக்கு
உங்கள் வயதிற்கும், தேவைக்கும் பொருத்தமான விதத்தில் மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து வாழ்க்கையின் வெற்றிப் பாதைக்குள் பிரவேசியுங்கள்

உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)
வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 860/= ரூபா வரையான விசேட சலுகை.
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
Money Master
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


யாழ். மாவட்டத்தின் சார்பில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த எம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைந்தர்களுக்கு இலங்கை வங்கியின் வாழ்த்துக்கள்.
"ரண் கெகுளு" கணக்கின் மூலம் உங்கள் பிள்ளையின் உயர் கல்விக்கான நிதி அத்திவாரத்தைக் கட்டியெழுப்புங்கள். இக்கணக்கு பாதுகாவலருக்கான இலவச ஆயுட் காப்புறுதி, பிள்ளைகளுக்கான விபத்து மற்றும் சுகயீனக் காப்பீடு, 5ஆம் ஆண்டு மற்றும் பல்கலைக்கழகப் புகுமுக பரீட்சை களுக்கான புலமைப்பாரிசில்கள் போன்ற பல தனித்துவமான நன்மைகளையும் கொண்டுள்ளது.
ரண் கெகுளு
BOC
இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

# தோனியார் கல்லூரி மாணவர்கள்

# தேசிய மட்டத்தில் முதலிடம்

## ின் ஈட்டிய சாதனையை

## ம் சிறப்பு மலர் -2008



ஸ்ரின் ,M.மரியலூயிஸ் , M.மயூரன் T. தமிழ்மாறன் ,M.டினேஸ் , J.பிரதீபன்

சிரியர்),வண.பிதா.J.A.யேசுதாசன் (அதிபர்) ,A.சுலக்சன்(அணித்தலைவர்) ,K.சசிகுமார்

தோமஸ்தீபன் ,G.ஹொக்சன் பிரதீப். S.வினோத்ராஜ் ,M. தினேஷ் ,A. அன்ரோயோசப்பின்

. அனோஜன் ,E. அமலதாஸ் ,A. சிபிகரன் ,C.ஜெபநேசன் ,J அன்ரன் கஜன்

## இதயத்திலிருந்து...

த அந்தோனியார் கல்லூரியும் விளங்கி வந்தது என்பதை எவரும் மறந்து விட முடியாது. நிர்மலமான ளோடு மாண்புற்று விளங்கிய இக் கல்லூரி போரின் ஆதிக்கத்திற்குள்ளாகி இடப் பெயர்வோடு தனிமரமாக றம் கற்றல் பின்னடைவு மறுபுறமாக உருக்குலைந்துபோன இக் கல்லூரி காலதேவன கருணையால் விரக்தி கொண்ட மாணவர்களையும் இடம்பெயர்வால் நொந்துபோன உள்ளங்களையும் உறவுகளையும் ள ஆரம்பித்த வேளையில் கல்வியை விட நம்பிக்கையையும் மன நிலையில் மாற்றத்தையும் ஏற்படுத்த

வதற்கு பல இணைப்பாட செயற்பாடுகளை நகர்த்த வேண்டி இருந்தது. நாட்டுக் கூத்துக்கள் மூலமாகவும் விரக்திக்கு மருந்திட்ட நாங்கள் 2000ஆம் ஆண்டு முதல் படிப்படியாக முன்னேறி வந்தோம். இக் காலப் துறையில் நாங்கள் முன்னேறிச் சென்ற வேளையில் எமது கல்லூரியின் மாணவர் தொகை குறைவாக ல் தொடர்ச்சியாக உடற்பயிற்சியில் பங்கெடுத்து வந்த படியாலும் 15-19 வயது மாணவர்களை ஒருங்கே தெரிவு செய்து சிறப்பாக வளர்த்து வந்தோம்.

மாவட்டத்தில் 2ஆம் இடத்தையும் மாகாணத்தில் 1ஆம் இடத்தையும் தேசியத்தில் 2ஆம் இடத்தைபெற்று ண்டிலிருந்து தொடர்ச்சியாக 3 தடவைகள் மாவட்டத்தில் முதலிடத்தையும் மாகாணத்தில் நான்கு தடவை காரணமாக 2006ஆம் ஆண்டு தேசியம் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. 2007இல் நல்லதொரு உடற் அனைத்தையும் தாண்டி தேசிய நிலைப் போட்டிக்குச் சென்றிருந்தோம். ஆனால் விதி வசத்தால் வெல்வதற் இந்த ஏமாற்றம் கல்லூரி நிர்வாகத்திற்கும் மாணவர் மனங்களிலும் ஒரு வித இனம் புரியாத உத்வேகத்தை வு மேலோங்கிக் காணப்பட்டது.

ல மட்ட போட்டிகளிலும் முதலிடத்தை பெற்று கடந்த 6ஆம் திகதி நீர் கொழும்பு ஆவே மரியாள் கன்னி ள் வெற்றி பெற்று சாதனை நிலை நாட்டி உள்ளார்கள். இதன் மூலம் காவலூர் கல்லூரியின் பெருமை றை தூக்கி நிறுத்தியுள்ளனர். உண்மையில் எமது கல்வி வலயத்தின் ஒவ்வொரு அதிகாரிகளும் மைந்தது.

வருகின்றோம். அந்த வகையில் எம் கல்லூரி உத்தியோகஸ்தர் குழாமினர் இம் மாணவர்களுக்கு காடுத்தன. மேலும் 98ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரையான இந்த தசாப்த காலத்தில் ன். திரு ஏ .தம்பித்துரை . திரு எம்.வி.சுயாந் ஆகிய பயிற்றுவிப்பாளர்களையும் நன்றியுடன் நினைக் பிற்சியாளர்களின் நல்ல மனதை இவ் வேளையில் வாழ்த்தி நிற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ாமைத் துடிப்பின் மூலமாகவும் புதிய சிந்தனைகள் மூலமாகவும் பல்கலைக்கழக உடற்கல்வித்துறை யில் ணி அளப்பரியது. கடந்த 25 நாட்களாக தமது செயற்பாடுகளை எமக்காக ஒதுக்கி வவுனியா , கொழும்பு றுவிப்பாளர் சுயாந் ஆகியோர் செல்கின்ற இடமெல்லாம் பயிற்சிகளை வழங்கி எம் அணியோடு கூட வர்களுக்கு எனது விசேடமான நன்றியை தெரிவிக்கின்றேன்.

றிச் சான்றிதழால் பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலும் கல்வியியற் கல்லூரிகளிலும் உயர் ன்றிதழ் எமக்கு கிடைத்துள்ளது. நிச்சயமாக மேலும் பல மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கு சுலப

ாகவே இவ் உடற்பயிற்சி போட்டியை நீண்ட காலமாக எமது கல்லூரி தெரிவு செய்து வந்தது. எனவே இவ் ட்டி காவலூர் அன்னைக்கு பெருமை சேர்த்த என் செல்லக் குழந்தைகள் 30 பேருக்கும் இதயத்தின் வடைய அந்தோனி நாமத்தில் ஆசி கூறி வாழ்த்துகிறேன்.

**வண. பிதா . ஜே.ஏ. யேசுதாஸ்**
**அதிபர் ,**
**யா/ புனித அந்தோனியார் கல்லூரி.**

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



தேசிய நிலை உடற்கல்விப் போட்டியில் முதன்மை நிலை பெற்ற யா/ புனித அந்தோனியார் கல்லூரியின் ஆனந்த வெள்ளத்தில் இணைவதில் பேருவகை அடைகின்றேன். அகவயத்தன்மை மதிப்பீட்டிற்கு உட்படும் இவ் உடற்கல்விப் போட்டி நீதி தவறாத நடு நிலைத் தீர்ப்பினால் யா/ புனித அந்தோனியார் கல்லூரி தேசிய நிலையில் சாதனை படைத்து அனைவரையும் ஈர்த்துள்ளது.

விடாமுயற்சி,அவா அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்குக் கிடைத்த வெற்றியே இச் சாதனையாகும். இச் சாதனை ஒரு சாதாரண நிகழ்வல்ல. பல்வேறு சவால்களை எதிர்கொண்டு சமாளித்து எல்லோரையும் பிரமிக்க வைத்த ஒரு வரலாற்று நிகழ்வு இந்நிகழ்வானது பல கல்லூரிகளுக்கு உத்வேகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. தேசிய நிலைப் போட்டிகளில் குறித்த சில போட்டிகளின் வெற்றியினை வடமாகாணப் பாடசாலைகள் ஒவ்வொரு வருடமும் தம் வசமாக்கி வருகின்ற.ன உடற்பயிற்சிப்போட்டி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். 2003ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்திய ஆண்டுகளிலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உடற்பயிற்சிச் சாதனைகளை வடமாகாணப் பாடசாலை கள் தமதாக்கிக் கொண்டு வருகின்றன. இக் கல்லூரி இரண்டாம் முறையாக வடமாகாணத்திற்குப் பெருமையைத் தேடித்தந்துள்ளது. அற்புதமானது. முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இக்கல்லூரி ஒருசிறந்தஎடுத்துக்காட்டாகும். இவ் வெற்றியின் பின்னணியில் இக் கல்லூரியில் பற்றுக் கொண்ட அதிபரான வணபிதாவும் ஏனைய ஆசிரியர்களும் காணப்படுகின்றமை ஒரு சிறப்பம்சமாகும். இவ் வெற்றிக்கான கூட்டு முயற்சியில் ஈடுபட்ட அனைவரையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வரோதய நகர்.
திருகோணமலை.

**வீ. இராசையா**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்**
**வடமாகாணம்.**

## விளையாட்டு பொறுப்பாசிரியரின் செய்தி



புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் என்ற வகையில் இவ் வெற்றியை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது பாடசாலை யானது இன்று தேசத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பதித்துள்ளது. இவ் வெற்றி எமது பாடசாலைக்கு மட்டுமல்ல யாழ்.மாவட்டத்திற்கே பெருமை சேர்த்துக் கொடுத்துள்ளது. எந்த நிலை வரினும் மனம் தளரோம் என்பதனை இன்று இவ் வெற்றியின் மூலம் எடுத்துகாட்டியுள்ளோம். எமது அணியானது தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் மாகாண மட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றது. 2007ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தினையே பெற்றுக்கொண்டது. இவ் நிலை கண்டு மனம் தளராத எமதுஅதிபர் வண பிதா ஜே.ஏ.யேசுதாஸ் அடிகளாரின உத்வேகத்தில் எமது அணி தொடர்ச்சியாக பயிற்சியில் ஈடுபட்டது. நாம் சாதிக்க வேண்டும். எமது நோக்கம் மாறக்கூடாது என்று எமது அதிபர் அடிக்கடி கூறுவார். அவரது இக் கூற்றை வேத வாக்காக எடுத்து எமது மாணவர்கள் கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு இன்று சாதித்திருக்கிறார்கள்.

இன்று இவர்கள் இச் சாதனையை நிலை நாட்ட உறுதுணையாக இருந்த எங்கள் அதிபர், பயிற்றுவிப்பாளர் சுஜாந் ,ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். எமது மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு சென்றவேளை அவர்கள் பல துன்பங்களை அனுபவித்தார்கள். அத்துன்பங்கள் எல்லாம் வெற்றிக்கு தடையாக அமையக்க கூடாது என்பதற்காக அவற்றை எல்லாம் தாங்கி இன்று வெற்றி பெற்றுள்ளார்கள். உடற்பயிற்சி போட்டியில் பயன் படுத்தும் உபகரணங்கள் எல்லாம் இரும்புகளினால் அக்கப்பட்டவை. அவ்வாறான உபகரணங்களை ஊர்காவற்றுறையில் இருந்து கொழும்பு ஈறாக எத்தனையோ தடவைகள் இறக்கி வாகனங்கள் மாற்றிக் கொண்டு சென்று போட்டியில் பங்குபற்றி வென்றுள்ளார்கள். அத்துடன் எமது வீரர்கள் 25 நாட்களாக கால நிலை மாற்றம் பிரயாணக் களைப்பு, போதிய ஓய்வின்மை போன்ற பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து இன்று வெற்றியின் உச்சத்திற்கு சென்றுள்ளார்கள். இவ் வெற்றிக்களிப்பில் இருக்கின்ற நாம் எமது இவ் வெற்றிக்களிப்பை பத்திரிகை வாயிலாக ஏனையவர்களுடனும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**கே. சசிகுமார், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்,**
**யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.**

## அணித்தலைவரின் உள்ளத்திலிருந்து...

வெற்றியை எமது கல்லூரிக்கு காணிக்கையாக்குகிறோம்



புனித அந்தோனியார் கல்லூரி யின் உடற் பயிற்சி அணியினர் சார்பாக அணித் தலைவர் என்ற வகையில் இவ்வெற்றி எமக்களித்த மட்டற்ற மகிழ்ச்சியை பத்திரிகை வாயிலாக பகிர்ந்து கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். அந்த வகையில் எமதுகல்லூரி அதிபர் வண பிதா. ஜே.ஏ. யேசுதாஸ் அடிகளாரின் சிறந்த வழி நடத்தலும் அணியின் பயிற்றுனர் சுயாந், அவர்களின் நுட்பமான பயிற்றுவிப்பு முறையும் இவ் உடற் பயிற்சி குழுவின் ஒவ்வொரு அங்கத்தவர்களது சிறந்த ஆர்வமும் மனவைராக்கியமும் இவ்வெற்றியினை எமது கல்லூரி பெறுவதற்கு ஒத்தாசையாக இருந்தது.

எமதுபாடசாலை 2005ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் ஆசிரியர் எம்.எவ்.மெடோன் தலமையில் 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்டது. பின்னர் அந்நிலை யினைத் தக்க வைக்க வேண்டும் என்று எண்ணி 2006ஆம் ஆண்டு உள் நாட்டு யுத்தம் காரணமாகபயிற்சியை மேற்கொண்டிருந்த போதும் தேசிய மட்டத்தில் பங்கு பற்ற முடிய வில்லை. பின்னர் 2007ஆம் ஆண்டு கல்லூரி அதிபர் அவர்களின் ஊக்கத்தினாலும் மாணவர்களின் விடா முயற்சியினாலும் கடும் பயிற்சிகளை மேற்கொண்டு தேசி மட்டத்தில் பங்கு பற்ற தகுதி பெற்றோம். இருந்தபோதிலும் எமது கடின பயிற்சிக்கேற்ப தகுந்த பலனை பெறமுடியவில்லை எனினும் எம்மிலிருந்த மன வலிமையும் கல்லூரி முதல்வரின் ஊக்கமும் மீண்டும் எம்மை இவ் நடப்பாண்டில் உடற் பயிற்சி பாதையில் நடக்கச் செய்தது.

அந்த வகையில் பயிற்சிகளை மேற்கொண்டு பயிற்சிக்கேற்ப நிறைவான பலனை பெற வேண்டும் என்று எண்ணி மாகாண மட்டப்போட்டியில் பங்கு பற்றி முதலிடத்தைப்பெற்று மாகாண ரீதியில் கெட்ரிக் சாதனை யை நிலை நாட்டி தேசிய மட்டத்தில் பங்கு கொள்ள தகுதி பெற்றோம். எனவே நாம் முன்பு கிடைத்ததோல்வியை சவாலாகவும் தெய்வீகதுணையை பலமாகவும் கொண்டு முழு வலிமையையும் ஒருங்கே கொண்டமைந்தவர்களாக போட்டியில் பங்கு பற்றினோம். இதன் பொருட்டே எமது கல்லூரிக்கு இவ் வெற்றியை எம்மால் பெற்றுக்கொடுக்க முடிந்தது. இத்துடன் எமது வெற்றிக்காக இறுதிவரை பயணித்த விளையாட்டுப் பொறுப்பாசிரியர் கே. சசிகுமார் ஆசிரியர், றோபேசன் மற்றும் ஏனைய கல்லூரி ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களின் ஊக்கமும் கடந்த கால உடற்பயிற்சி மாணவர்களது ஒத்துழைப்பும் ஏனைய மாணவர்களது உதவியும் இவ்வெற்றியினை பெறுவ தற்கு படிக்கற்களாக இருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இது ஒரு புறமிருக்க தேசிய மட்ட ரீதியில் முதலாம் இடத்தை பெற்றமையினால் எமது பின்னைய கல்விச்செயற் பாடுகளுக்கு தேசிய மட்டத்தில் முதல் இடம் என்ற உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் கிடைத்தமையி னால் இவ் வெற்றிப் பெருக்கு இரட்டிப்பாக. அமைந்துள் ளது. எமது கல்லூரி போதிய வளங்களைக் கொண்டிரா விட்டாலும் கிடைத்த வளங்களை பாடசாலை நிர்வாகத் தின் துணையோடு முழுமையாகப்பயன்படுத்தி எம் ஒவ் வொருவரது ஒட்டு மொத்த பங்களிப்பாக இந்த பெரு மையை கல்லூரிக்கு கொடுத்திருக்கிறோம். எம்மைப்பொறுத் தவரையில் இவ்வெற்றியை கல்லூரிக்கு நாம் செய்த நன்றிக்கடனாகவே கருதுகின்றோம்.

**ஏ.சுலக்ஷன்**
**உடற்பயிற்சி அணியின் தலைவர்.**




தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்று 23 ஆண்டுகளின் பின் சாதனை படைத்து யாழ். மண்ணிற்கு பெருமை சேர்த்த ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களை வாழ்த்துவதுடன் அவர்களின் சாதனைப் பயணம் மேன்மேலும் தொடர இறைவனை வேண்டுகின்றோம்.

இப்போது புதிய சேமிப்பு கணக்கினை அறிமுகப்படுத்துகிறது

"இலங்கையின் அதி சிறந்த நுகர்வோர் சேவைகளை வழங்கும் வங்கி" - ஏசியன் பேங்கர்

சர்வதேசத்தர விருதுபெற்ற வர்த்தக வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி அகக் குறைந்த ரூபா 50,000 ஆரம்ப வைப்புக்கு 12.5%* மும் ஆகக்குறைந்த ரூபா 100,000 ஆரம்ப வைப்புக்கு 14%** மும் வருடாந்த வட்டியாக வழங்குகிறது.

அத்துடன் நீங்கள் எத்தனை தடவைகளேனும் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

- இலவச இணைய வங்கிச் சேவை
- இலவச SMS வங்கிச் சேவை
- 90% வரை துரித கடன் வசதி
- இலவச ATM அட்டை

அதி சிறந்ததிலிருந்தே அதிசிறந்ததைப் பெற முடியும்

கெபிடல் சேமிப்புக்கணக்குகள் பத்தும் விமான சீட்டிழுப்பிற்கு தகுதி பெறாது. HNB ஃபிச் றேட்டிங் லங்காவினால் AA (lka)ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது.

*12.5% வருடாந்த விளைவு வீதம் 13.24%

**14% வருடாந்த விளைவு வீதம் 14.93%

HNB CAPITAL SAVINGS

HNB



தீவக மண்ணின் மைந்தர்கள் இன்று தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று யாழ். மாவட்டத் திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். அவர்களின் இச்சாதனை மேன் மேலும் வளர பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

PEPSI

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. 222 2833 ,222 7144

# யுத்தத்தை ஒருபோதும் கைவிடக்கூடாது என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்கிறார்

## அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ரஜீவ விஜேசிங்க



(கொழும்பு) விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள யுத்தத்தை ஒருபோதும் கைவிடக் கூடாது என்று இந்தியா தெளிவாகக் கூறியுள்ளது என அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை, தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து இலங்கையும் இந்தியாவும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

வன்னியிலுள்ள பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அண்மையில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி வெளியிட்டுள்ள கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க மேலும் கூறியுள்ளதாவது, வடக்கிலுள்ள பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பாக கரிசனை தெரிவித்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையை அரசாங்க சமாதான செலயகம் வரவேற்கின்றது. பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவேளை வடக்கிலுள்ள பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதில் இலங்கையும் இந்தியாவும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளன.

இதற்கு அமைவாகவே புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ள மக்களுக்கு அரசாங்கம் சமூக சேவைகளை வழங்குவகோடு. ஐ.நா மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக மனிதாபிமான உதவிகளை அளித்து வருகின்றது.

தற்போதைய நிலையில் அங்கு நிலைமைகளைக் கண்காணிப்பதற்கும், புலிகளின் துஷ்பிரயோகங்களால் எழும் அழுத்தங்களை சமாளிப்பதற்காகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினை(ஐ.சி.ஆர்.சி) வன்னிப் பகுதியில் தொடர்ந்து இருக்குமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம் தொடர வேண்டும் என்பதை தெளிவாக எடுத்துக்கூற ஆய்வாளர்கள் தவறியுள்ளனர்.

எனினும் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை இலங்கை அரசாங்கம் கைவிடக் கூடாது என்பதை இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெளிவாகக் கூறியுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய இவ்வாறான புரிந்துணர்வு சார்க் அமைப்பின் அங்கத்தவர்களின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. (அ-6)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கலைமாமணி அண்ணாமலை மகாதேவனின் " POETICAL WORLD " எனும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் யா/ தேவரையாளி இந்துக்கல்லூரியில், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி வருகை விரிவுரையாளர் செ.பரராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரையை இளைப்பாறிய ஆசிரியர் கலாபூஷணம் தெணியான் சி.க.லோகநாதன், அறிமுக உரையை வதிரி பூவற்கரைப் பிள்ளையார் தேவஸ்தான தலைவர் மா.கிருஷ்ணகாந்தன் ஆகியோர் நிகழ்த்துவர் .தேசிய கல்வியியற் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர் த.மோகன் எம்.ஏ. நூல் வெளியீட்டுரையை வழங்கி நூலை வெளியிட்டு வைப்பார்.

முதல் பிரதியை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை இளைப்பாறிய கனிஷ்ட பிரிவு அதிபர் திருமதி இராசம்மா வல்லிபுரம் பெற்றுக்கொள்வார். நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி ஆற்றவுள்ளார். (ஓ)

# வருடாந்த விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

தென்புலோலி பெரிய தேவனத்தாய் சனசமூக நிலைய முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா பெரிய தேவனத்தாய் ஆலய முன்றலில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புலோலி கல்வி நிலைய இயக்குநர் கே.வி.என். சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் கே.கே. யோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உப தலைவர் எஸ்.மணிமாறன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

வடமராட்சி வலய பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஏ.புண்ணியமூர்த்தி, பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரிய ஆலோசகர் ஏ.என்.எஸ். திருச்செல்வம், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் கே.வேல்முருகு, புலோலி குளோபல் தகவல் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் எஸ். கார்மேகவண்ணன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், கிராம உத்தியோகத்தர் ரீ.சுபேந்திரராஜா, சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.யோகராஜா, கிராம உத்தியோகத்தர் என்.குமரகுருநாதன், கிராம உத்தியோகத்தர் எம். கந்தசாமி, பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி தவலட்சுமி இரவீந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள். சனசமூக நிலையச் செயலாளர் பரா.ரமேஸ் நன்றியுரை வழங்குவார்.(ஓ-52)

# காணாமல் போன 261 பேர் தொடர்பில் இதுவரை எதுவித தகவலும் இல்லை

## மக்கள் கண்காணிப்புக் குழு தெரிவிப்பு



காணாமல் போன 261 பேருக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை எந்தத் தகவலும் இல்லையென மக்கள் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. காணாமல் போனவர்களில் 42 பேர் மாத்திரமே பயங்கர வாதத் தடுப்புப் பிரிவினரால் அல்லது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மக்கள் கண்காணிப்புக குழுத தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிந்திய அறிக்கைகளின் படி கடத்தல்கள் குறைவடைந்திருப்பதாகக் கூறும் அரசாங்க அதிகாரிகள், ஏற்கனவே காணாமல் போனவர்கள் தொடர்பில் எந்தவிதமர்ன அக்கறையும் செலுத்துவதில்லையென மக்கள் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

கடத்தல்கள் தொடர்பாக பெருமளவான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாலேயே காணாமல் போதல் சம்பவங்கள் குறைந்திருப்பதாக கூறப்படுகிறது. கடத்தல்களைக் குறைப்பதற்குத் தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டிருப்பதாக பொலிஸ் திணைக்களப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர கூறியிருந்தார். “கடத்தல்கள் நடைபெறுவதில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்குப் பல பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்” என்றார் அவர்.

### அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு காரணமல்ல

அதிகரிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பே கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் குறைவடைந்தமைக்குக் காரணம் எனக் கூறுவதை மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளர் மனோகணேசன் மறுத்துள்ளார். கடத்தல் சம்பவங்களின் எண்ணிக்கை தற்பொழுது குறைவடைந்திருந்தாலும் நிச்சயமாக சிறிது காலத்தில் அது அதிகரிக்கும். இவ்வாறே கடந்த காலங்களில் நடைபெற்று வந்தது என அவர் குறிப்பிட்டார்.

பொலிஸார் எனத் தம்மை அடையாளப்படுத்தியவர்களாலேயே கூடுதலான கடத்தல் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்த மனோகணேசன், கடத்தல்காரர்களில் சிலர் இராணுவச் சீருடைகளிலும் சென்றுள்ளார்கள் எனவும் கூறினார். முன்னாள் விமானப்படை அதிகாரி கஜநாயக்க கைது செய்யப்பட முன்னரும், அவர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னரும் அதிகரித்திருந்ததாக மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடத்தல்கள் குறைவடைந்துள்ளன அல்லது கடத்தல்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவது மாத்திரம் அரசாங்க அதிகாரிகளின் கடமையல்ல எனவும், பாதிக்கப்பட்டிருக்கும் கடத்தப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாப்பதும் அரசாங்கத்தின் கடமையெனவும் கூறப்படுகிறது.

எனினும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்கு தம்மால் முடிந்தவரை முயற்சிப்பதாகத் தெரிவிக்கும் அரசாங்க அதிகாரிகள், காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்கும் உதவுவதாகக் கூறுகின்றனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடத்தப்பட்டவர்கள் குறித்து அவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக அறிவிக்கப்படுவதாக காணாமல் போவனவர்கள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினரும், தொழில்சார் கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சிகள் பிரதி அமைச்சருமான பி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

காணாமல் போய் இதுவரை திரும்பாதவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்திருப்பதாக அமைச்சர் கூறுகிறார். “காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்கு அரசாங்கம் முழுமுயற்சிகளையும் முன்னெடுத்துள்ளது” என்றார் அமைச்சர்.

எனினும் கூடுதலான சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கும் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளிலேயே கூடுதலான கடத்தல்கள் இடம் பெற்றிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. பாதுகாப்புத் தரப்பினருக்கு அல்லது பொலிஸாருக்குத் தெரியாமல் இந்தக் கடத்தல் சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பில்லையென மக்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மனோ கணேசன் வாதிடுகிறார்.பொது இடங்களில் எவ்வாறு இந்த ஆட்கடத்தல்கள் நடைபெறுகின்றன என்பது தொடர்ந்தும் விவாதத்துக்குரிய விடயமாக உள்ளதென ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேவேளை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர்கள் மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவினர்களால் தேடப்படுபவர்கள் காணாமல் போகின்ற சம்பவம் குறித்து இம் மாதம் 22 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் ஆர். யோகராஜன் கூறினார். (அ-6)

# பிலியந்தலையில் 18 தமிழர்கள் கைது

பிலியந்தலைப் பிரதேசத்தில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளின் போது சந்தேகத்தின் பேரில் 18 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிலியந்தலை, மடபான, கஹபொல, நிவென்திடிய, பொகுந்தர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தமிழர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய எவ்வித ஆவணங்களும் குறித்த சந்தேக நபர்களிடம் காணப்படவில்லை எனவும்,அனைவரும் தோட்டப் புறங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் எனவும் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-6)

# ஏமன் நாட்டு அமெரிக்க தூதரகத்தில் குண்டு வெடிப்பு 16 பேர் பலி



(சனா)

ஏமன் நாட்டில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் நேற்று முன்தினம் கார் குண்டு வெடித்ததில் 16 பேர் பலியாயினர்.

சர்வதேச பயங்கரவாதி ஒசாமாவின் மூதாதையர் நாடு ஏமன். மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கும் நாடு. தலைநகர் சனாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் நேற்று முன்தினம் இரண்டு கார் குண்டுகள் வெடித்தன. இதில் அருகில் உள்ள கட்டடங்களும் சேதமடைந்தன. ஒரு இந்தியர் மற்றும் தூதரக ஊழியர்கள் உட்பட 16 பேர் பலியாயினர். குண்டுவெடிப்பைத் தொடர்ந்து 10 நிமிடங்களுக்கு இந்த தூதரக கட்டடத்தின் மீது துப்பாக்கித் தாக்குதலும் நடைபெற்றதாக, இங்குள்ள பாதுகாவலர்கள் தெரிவிக்கின்றனர். இதில், அருகில் உள்ள தூதரக கட்டடத்தின் ஒரு பகுதி தீப் பிடித்து எரிந்ததாக சிலர் தெரிவிக்கின்றனர். இந்தக் குண்டு வெடிப்புக்கு ஏமன் நாட்டு ஜிகாத் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த அமைப்பைச் சேர்ந்தவர்களை விடுவிக்கக் கோரி கடந்த வாரம் இவ்வமைப்பு ஏமன் அரசுக்கு கடிதம் அனுப்பியது. “இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் அமெரிக்கா, பிரிட்டன், ஐக்கிய அரபு எமிரேட் உள்ளிட்ட தூதரகங்கள் மீது தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்படும்” எனவும் இந்தக் கடிதத்தில் ஜிகாத் அமைப்பினர் எச்சரித்திருந்தனர். அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாததால், இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து பயங்கரவாதிகளுக்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கையை ஏமன் நாடு ஆதரித்து வருகிறது. இதனால், ஏமன் அரசு மீது அல்-குவைதா உள்ளிட்ட அமைப்புகள் அதிருப்தி அடைந்து தாக்குதலை நடத்தி வருகின்றன. (அ-6)

பெரும்பாலான மனிதர்களை நம்பிக் கைதான் பாதுகாத்து வாழ்க்கையில் நிற்க வைக்கின்றது. – கிரிஸ்

வலம்புரி

## வன்னி மக்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்

வன்னியில் மனிதப் பேரவலம் ஏற்பட்டுள்ளது. இந்த அவலத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்தத் தவறும் பட்சத்தில் மனித உயிரிழப்புக்கள் கணிசமாக இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

விமானக் குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல், இடம்பெயர்வு என மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

இந்த அவலம் நிறைந்த சூழமைவில் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் வன்னிப் பெருநிலப்பரப்பை விட்டு வெளியேறியுள்ளமை சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக வன்னி மக்களுக்குச் செய்த பெரும் துரோகத்தனமாகும்.

சர்வதேச அமைப்புகள் தமது கஷ்ட நிலையில் உதவி செய்யும் என நம்பியிருந்த மக்களை அந்த அமைப்புகள் கைவிட்டுச் சென்றுவிட்டன.

அரசின் உத்தரவின் பேரிலேயே நாங்கள் வெளியேறுகின்றோம் என அந்த அமைப்புகள் கூறிக் கொண்டாலும் சர்வதேச ரீதியில் வன்னி மக்களைக் காப்பாற்ற அவை பேருதவியாற்ற முடியும்.

குறிப்பாக ஐ.நா. சபை இது விடயத்தில் தலையிட்டு வன்னி மக்களைப் பாதுகாக்க இந்த அமைப்புகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இருந்தும் அத்தகையதோர் விடயம் இடம்பெறுவதாகத் தெரியவில்லை. அண்டை நாடான இந்தியா, ஈழத் தமிழர்களைக் கைவிட மாட்டோம் எனக் கூறிக் கொண்டு அரசின் யுத்தத்திற்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கின்றது.

தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் கலைஞர் கருணாநிதி வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தமிழக மக்களுக்கு வழங்கித் தனது திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்காலத்தைக் காப்பாற்றும் சிந்தனையில் மூழ்கிப் போயுள்ளார்.

என் உடன்பிறப்புக்களே! உங்கள் கண்ணில் நீர் வடிந்தால் என் உதிரம் கொட்டுமையா! என்றெல்லாம் கூறிய கலைஞர், தன் மகன் ஸ்ராலினை அடுத்த முதல்வர் ஆக்குவதைத் தவிரத் தனக்கு வேறு வேலையே இல்லை எனக் கருதுகின்றார்.

இதனாலேயே மத்திய அரசில் அதீத செல்வாக்கு இருந்தும் கலைஞர் கருணாநிதி வன்னி மக்களுக்காகக் குரல் கொடுக்க மறந்து – மறுத்து விட்டார்.

இப்போது அண்டை நாடான இந்தியா தன் பழி தீர்க்கும் படலத்தை நிறைவேற்றத் துடிக்கின்றது.

சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் தங்கள் பொறுப்பை உணர்ந்து கொள்ளாமல் வெளியேறியுள்ளன.

யுத்தம் நடக்கின்றது. ஐந்து ஆறு தடவைகள் வன்னியில் மக்களிடம் இடம்பெயர்ந்து மனித வாழ்வை வெறுத்து சோகத்தின் உச்சத்தில் காலம் கழிக்கின்றார்கள்.

இந்த அவலத்தைத் தடுப்பதும் துன்பப்படும் மக்களைத் தூக்கி நிறுத்துவதும் அந்த இறைவனைத் தவிர வேறு யாராலும் முடியவே முடியாது.

# காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை 2009 ஏப்ரலில் செயற்பாடுகளை ஆரம்பிக்கும்

## லங்கா சீமெந்து நிறுவனத்தின் புதிய பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் தனது உற்பத்தி செயற்பாடுகளை ஆரம்பிக்கும் என லங்கா சீமெந்து நிறுவனத்தின் புதிய பணிப்பாளர் பொனுப்பிட்டியே நாகதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதல்முறையாக நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் பௌத்த மத குருவான இவர் யாழ்ப்பாணம் தங்கியிருந்து நிறுவனத்தின் பணிகளை முன்னெடுக்க போவதாக கூறுகிறார்.

யாழ்.குடாநாட்டிற்கு சீமெந்து மூட்டைகளை இதுவரை அனுப்பிவரும் ஒரேஒரு நிறுவனமான லங்கா சீமெந்து நிறுவனம் இதுவரை யாழ்.குடாநாட்டிற்கு அனுப்பிவந்த சீமெந்து மூட்டைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுவந்த 5 ஆயிரம் சீமெந்துப் பைக்கற் கோட்டாக்கள் 40ஆயிரமாக அதிகரிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை ஆரம்பிப்பதன் மூலம் தற்பொழுது நாளாந்தம் உற்பத்தி செய்துவரும் சீமெந்தை 3ஆயிரத்து 200 மெற்றிக் தொன்னாக அதிகரிக்க முடியும் எனவும் இதன் மூலம் விடுவிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் உள்ளடங்கலாக 3 ஆயிரத்து 500பேர் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இந்திய டாட்டா நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் இந்தியாவின் ராம்கோ நிறுவனத்துடன் இணைந்து புனரமைக்கப்படும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை ஏப்ரல் மாதம் ஆரம்பிக்க முடியும் என லங்கா சீமெந்து நிறுவனத்தின் பணிப்பாளர் கூறியுள்ளார்.

யாழ்.குடாநாட்டுக்கான சீமெந்துப் பைக்கற்றுக்களை மேலதிகமாக அனுப்பிவைத்து மக்களின் சீமெந்துத் தேவையைப் பூர்த்தி செய்யவிருப்பதாகவும் அவ்வாறு சீமெந்துப் பைக்கற்றுக்களை பெற்றுக்கொள்பவர்கள் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தி சீமெந்துப் பைக்கற்றுக்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு சீமெந்து சென்றுவிடக்கூடாது என்பதில் தாம் உறுதியாகவிருப்பதாக லங்கா சீமெந்து நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார். (ஓ)

# அரசதுறையில் ஆண்களைவிட பெண்கள் எண்ணிக்கை அதிகம்

அரசாங்கத்துறையில் ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை அதிகம் என புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கையின் 19.8 மில்லியன் மக்களில் 51 வீதமானோர் பெண்கள் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத் திணைக்களங்களில் நூற்றுக்கு 60 வீதமானோர் பெண்களாகும். பாடசாலை ஆசிரியைகள் , தாதிகள் போன்ற தொழில்களிலேயே அதிகமான பெண்கள் தொழிலாற்றுகின்றனர். ஆசிரியர் தொழிலில் 66வீதமானோர் பெண்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டின் ஒரு மில்லியன் அரசாங்க பணியாளர்களில் சுமார் மூன்று இலட்சம் பேர் மத்திய அரசாங்கத்தின் கீழ் நேரடியாக தொழில்புரிவதாக புள்ளி விபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-6)

# இரண்டாவது காலாண்டில் பொருளாதாரம் 7வீதமாக அதிகரிப்பு – புள்ளிவிபரவியல் திணைக்களம்

(கொழும்பு)

2007ஆம் ஆண்டு இரண்டாவது காலாண்டுடன் ஒப்பிடுகின்ற போது 2008ஆம் ஆண்டு இரண்டாவது காலாண்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துள்ளது. 2007ஆம் ஆண்டு 6.4வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி இவ்வருடம் 7 வீதமாக அதிகரித்துள்ளது என்று புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்ட 2008ஆம் ஆண்டிறகான இரண்டாவது காலாண்டு அறிக்கையிலேயே மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது , சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலைகள் வெகுவாக அதிகரித்திருந்த போதிலும் எதிர்பார்த்ததை விடவும் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கைத்தொழிற் பிரிவில் 6.9 வீதமும், சேவைகள் பிரிவில் 6.9 வீதமும், விவசாயத்தில் 7.4 வீதமும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி மூலதன பொருட்களின் மூலமாக 9.5 வீதமும் , திட்டமிடப்பட்ட மூலதனத்தின் மூலமாக 28.2 வீதம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

பெரும்போக பயிர்ச்செய்கையின் மூலமாக 46.8 வீத வளர்ச்சியும், கைத்தொழில் துறைகளின் மூலமாக 19.6 வீத வளர்ச்சியும், சேவைகள் பிரிவில் 6.9 வீதமும் வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாறான வளர்ச்சிகளின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2008 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 7 வீதம் வளர்ச்சி கண்டுள்ளது என்று புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-6)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 38

கடவுள் பற்றிய எண்ணம் மிகப் பழைய காலத்திலேயே தோன்றி விட்டது. மனிதன் ஓரிடத்திலே நிலையாக வாழும் நாகரீகம் தோன்றிய போது கடவுள் பற்றிய எண்ணமும் தோன்றியது. நிலையாக வாழும் சூழலிலே தனது ஆற்றலால் கட்டுப்படுத்த முடியாத இயற்கையின் ஆற்றல்களைக் கண்டபோது அவற்றிற்குப் பணிந்து வாழும் முறைமையைக் கைக்கொண்டான். மழை, காற்று, இடி , மின்னல் , மலை, கடல், ஆறு , சுனை, பெருமரம் முதலான இயற்கை நிலைகளை வணங்கி வாழும் நிலையை மேற்கொண்டான்.

பின்னர் இத்தகைய பேராற்றல் கொண்ட இயற்கையை இறை உருவாக அமைக்கும் காலம் தோன்றியது காரைக் காலம்மையார் பாடிய பாடல்களில் சிவனுடைய திருவுருவத்தோற்றம் முதல் முதலில் தமிழ் மொழியில் சொல்லோவியமாக வரையப்பட்டுள்ளது. இறைவனின் மேனியின் நிறத்தைக் ''காலையே போன்றிலங்கும் மேனி'' என அவர் வர்ணித்துள்ளார். காலத்தில் கரைவில்மனிதன் கலையுணர்வால் சிற்பமும் ஓவியமும் உருவாகிய போது இறை உருவங்களும் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் அமைக்கப்பட்டன. அவற்றை கோயில்களில் அமைத்து வழிபடும் பக்தி நெறியும் உருவாகியது.

கோயில்கள் தோன்றிய போது கூட்டு வழிபாடு என்னும் முறைமையும் தோன்றியது. இக்கூட்டுவழிபாட்டை முனைப்புடன் பரவச் செய்தவர் சம்பந்தராவார். சம்பந்தர் வளர்ப்பு நெறியும் வாழ்வுச் சூழலும் வழிபாடு பற்றியதொரு தெளிவான விளக்கத்தை அவருக்கு வழங்கியிருந்தன. மக்க ளிடையே வழிபாடு பற்றிய உள்ளார்ந்த விருப்பை ஏற்படுத்த இசையை அவர் இணைத்து விட்டார். செந்தமிழால் கோயி லையும் சூழலையும் இறை உருவங்களையும் இசை யோடு பாடினார். கூட்டு வழிபாட்டு நிலையில் எல்லோரும் ஒன்றாய் கூடிப் பாடிப் பரவும் பக்தி நெறியைப் பரப்பினார். அவர் பாடிய தேவாரங்களின் பொருளும் இனிமையும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

புராணங்களிலே கூறப்பட்டுள்ள இறைவன் பற்றிய செய்திகளை மக்களுக்குச் சம்பந்தர் தனது பாடல்களால் எடுத்துக்கூறி பக்தி நெறி பற்றிய ஒரு புதிய கற்கை நெறியையும் மேற்கொண்டார். விண்ணும் மண்ணும் தொழும் கடவுள் பற்றிய அறிவைப் பயிற்றினார்.

மக்கள் தமது வாழ்க்கையில் எதிர்கொள்ளும் இடர்களிலிருந்து விடுபடுவதற்குக் கடவுள் வழிபாடு பற்றிய எண்ணமே சிறந்தது என நல்வழிகாட்டினார் அதுவே இன்று வரை எம்மை வழி நடத்திநிற்கிறது.

''விண்ணவர் தொழதெழ வெங்குரு மேவிய
சுண்ண வென் பொடியணி வீரே
சுண்ண வென் பொடியணிவீர் உமதொழுகழல்
எண்ண வல்லாரிடர் இவரே''

# சிரத்தையுடன் செய்யப்படும் மகாளய சிரார்த்தம்

எமது முன்னோர்களான -தென்புலத்தார் ஆகிய பிதிர்கள் பூவுலகில் சஞ்சரித்து தமது சந்ததியினருக்கு அருள்பாலிக்கும் காலமாக வருடந்தோறும் வரும் ஆவணி மாதத்து அபரபட்ச பிரதமை முதல் புரட்டாதி மாதத்து அமாவாசை வரையான சூரியபகவான் சிம்ம இராசியிலிருந்து கன்னிராசிக்குப் பிரவேசித்திருக்கும் பதினைந்து நாட்களும் மாளயபட்ச காலமாக பிதிர்கடன்செய்வதற்கான காலமாக நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

இந்துக்கள் தம் வாழ்க்கையில் செய்யும் கடைப்பிடிக்கும் முக்கிய கடமைகளான பிதுர்யக்மம், தேவயக்ஞும், பூதயக்ஞும், மானுட யக்ஞும், பிரம்மயக்ஞும் எனும் ஐம்பெரும் வேள்விகளில் பிதுர்யக்ஞும் முக்கியமான பிர தான கடமையாகவும் நன்றிக் கடனாகவும் சிரத்தையுடன் செய்யப்படுவதாக உள்ளது. சிரத்தையோடும் விசுவாசத்தோடும் நன்றியுணர்வோடும் பிதிர்களுக்குச் செய்யப்படும் கடமையாதலால் சிரார்த்தம், பிதிர்க்கடன்,நன்றிக் கடன் என பிதுர்யக்ஞும் பற்றி கூறுவார்கள். இதனைச் செய்வதால் பிதிப்தோ ஷங்களிலிருந்து விடுபடவும் மன அதை பெறவும் முடிகின்றது.

பிதிர்கள் பூவுலகிற்சஞ்சரிக்கும் போது அவர்களைவரவேற்று எம்மாலியன்றபடி உபசரித்து நன்றிக்கடன் செய்யும்போது அவர்கள் எம்மை ஆசிர்வதித்து எமக்கு ஆத்ம திருப்தியை அளிக்கின்றார்கள்.பிதிர்க் கடன்களைப் பெரிதாகச்செய்ய முடியாதவர்கள் பிதிர் தர்ப்பணமாகிய எள்ளும் தண்ணீரும் விட்டாகினும் கடமையைச்செய்யலாம்.எள்ளும் தண்ணீரும் விட்டுத் தர்ப்பணம் செய்வதற்குக் காரணம் மகா விஷ்ணுவின் உடலிலிருந்து ஏற்பட்டதே எள்ளும் தர்ப்பைப்புல்லுமாகும். இவற்றைக் கையிற் பிடித்து சூரியபகவான் உச்சியில் நிற்கும்போது பிறர்காணாமலும் நாம் மனங்கோணாமலும் அர்ப்பணமாகிய எள்ளும் தண்ணீரும் இறைக்கும் பிதிர்க்கடனைச் செய்தல் வேண்டும். இவ்விதம் செய்வதனால்பிதிர்களின்மனங்குளிர்வதுடன் தமது சந்ததியினரும் பூவுலகில் நல்வாழ்வு வாழ ஆசீர்வதித்துச் செல்வதாக நம்பப்படுகின் றது.

**16.09.2008 முதல் 29.09.2008 வரை**
**மகாளயபட்ச காலமாகும்**

இதனைப் பரமசந்நியாசம் பெற்றவரான ஆதிசங்கரர் கூடத்தமது தாயாருக்குப் பிதிர் கடன் சிரார்த்தம் செய்ததிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது அன்னையும் பிதாவும் முன்னறிதெய்சம் எனக் கொண்டாடும் நாம் எமது முன்னோர்களுக்கு- மறைந்த தந்தை தாய் வழியி னருக்கு முக்கியமான புரட்டாதி மாத மகாளய சிரார்த்த நாட்களிலாவது பிதிர் கடன்கள் செய்த பிதிரர்களைத் திருப்திப்படுத்தி அவர்களின் தோஷமின்றி ஆசிபெற்று நல்வாழ்வுவாழ முயல்வோமாக. அவரவர்தத்தம் இயல்புக்கேற்றவாறு பிதிர் கடன் செய்யலாம். அன்ன சிரார்த்தமாக எல்லோருக்கும் அன்னதானம் செய்யலாம். அன்றி ஹிரண்ய சிரார்த்தம் என எல்லோருக்கும் பணம் பொருள் தந்து செய்யலாம். இதுவும் முடியாதவர்கள் எள்ளும் தண்ணீரும் இறைத்து தர்ப்பணமாகச் செய்யலாம். எப்படிச் செய்வதாயினும் நம்பிக்கையுடனும் சீரத்தையுடனும் விசுவாசமாகவும் செய்யப்படும் சிரார்த்தமே பலனளிக்கும் என்பது திண்ணமன்றோ. (ஓ)

## கலந்துரையாடல் தொடர்பானசெய்தி

நேற்றைய வலம்புரியின் 7ஆம் பக்கத்தில் வெளியான உலக உணவுத் திட்டம் தொடர்பான செய்தியில் தெரிவிக்கப்பட்டபடி இன்றுவெள்ளிக்கிழமைமாலை2மணிக்கு கலந்துரையாடல் நடைபெற மாட்டாது என யாழ். மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (ஓ)

## பரிசளிப்பு விழா

யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அரங்கில் முதல்வர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல், யாழ்ப்பாணம் நிக்கொட் மாவட்ட செயலக பணிப்பாளர் என்.எஸ்.ஆர். சிவரூபன்,அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-3)

## புரட்டாதி மாதத்து மாளயபட்ச காலத்தில் குளோனிங் முறையில் கரு முட்டைகளை உருவாக்க ஆஸி.விஞ்ஞானிகளுக்கு அனுமதி

குளோனிங் முறையில் மனித கருமுட்டைகளை உருவாக்க விஞ்ஞானிகளுக்கு அவுஸ்திரேலியா அரசு அனுமதி வழங்கியுள்ளது. சிட்னியில் உள்ள இன்விட்ரோ பெர்டிலைசேசன் நிறுவனத்துக்கு இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதன் ஆராய்ச்சிக்காக 7200 மனித கருமுட்டைகளை உருவாக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய அரசின் தேசிய நலவாழ்வு மற்றும் மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் இந்த அனுமதியை வழங்கியது.

இந்த நிறுவனத்தின் குளோனிங் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும் என்று கவுன்சிலின் தலைவர் டாக்டர் ஜோன் பைன்ட்லே தெரிவித்தார். குழந்தையை உருவாக்குகிற அளவுக்கு விஞ்ஞானிகள் செல்லமுடியாது என்றும் அதற்கு முந்தைய கட்டத்திலேயே அவர்கள் தங்கள் ஆராய்ச்சியை முடித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-6)

# வன்னி மக்களின் அவல நிலையை வெளிக் கொணரும் வகையில் அவுஸ்திரேலியா, கனடா, சுவிஸ், ஜேர்மனியில் போராட்டங்கள்

(கொழும்பு)

வன்னியில் மனித அவலத்திற்குள் தள்ளப்பட்டுள்ள மக்களின் நிலையை வெளிக் கொண்டுவரும் வகையில் உலகின் பல்வேறு நாடுகளிலும் தமிழ்மக்களினால் கவனயீர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவுஸ்திரேலியா கன்பராவில் நேற்று முன்தினம் இரண்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கன்பரா நாடாளுமன்றத்துக்கு முன்பாக காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரையும் மக்கள் பதாகைகளைத் தாங்கி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத்திலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு முன்பாக பிற்பகல் 2.30 முதல் 4.30 மணிவரை கவனயீர்ப்பு நடைபெற்றதுடன் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. வீன்னி மக்களின் அவல நிலை, வன்னியில் மனிதநேய அமைப்புக்களின் வெளியேற்றம், இந்திய அரசின் படைத்துறை ஆளணி உதவிகள் என்பன இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

கனடாவில் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமையும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் கனேடிய தமிழர்களால் மாலை 3 மணி முதல் 6 மணிவரை இந்த நடவடிக்கை ரொறன்ரோவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதே நாட்களில் கன்டாவிலுள்ள சிங்கள மக்களும் இலங்கை அரசாங்கமும் இணைந்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சிறிலங்கா நாள் என்ற களியாட்ட நிகழ்வை ரொறன்ரோவில் நடத்தவுள்ளனர். சுவிற்சர்லாந்து தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் இரண்டு இடங்களில் கவனயீர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் 22ஆம் நாள் திங்கட்கிழமை சப்ஹவுசன் மாநிலத்திலும் இதனைத் தொடர்ந்து 24ஆம் நாள் புதன்கிழமை ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்திற்கு முன்பாகவும் கவனயீர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுவிஸ் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இதேபோன்று தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்காக ஜேர்மனியில் உணவு, உடை, மருந்துப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு தன்னார்வ நிறுவனங்களிடம் கையளிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி பேர்லினில் ஆர்ப்பாட்டப் பேரணியும் உணவுப் பொருள் கையளிப்பதற்காக முனுவும் கையளிக்கப்படவுள்ளது. (அ-6)

# யுத்தத்தை காரணம் காட்டி நாட்டை விற்று பிழைப்பு நடத்த வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.

(கொழும்பு)

யுத்தத்தை காரணம் காட்டி முழு நாட்டையுமே விற்றுப் பிழைப்பு நடத்த வேண்டிய நிலைக்கு இன்றைய அரச்ாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது என்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் யுத்த நடவடிக்கைகளுக்குத் தமது கட்சி என்றுமே எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டாதெனவும் கூறிய அவர், யுத்தம் கார ணமாக அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படுவதையும் வட-கிழக்கு அப்பால் வாழும் தமிழ் மக்கள் புலிகள் என்று முத்திரை குத்தப்பட்டு அநாவசியமாகக் கைது செய்யப்பட்டு துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படுவதை தமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமை காலை மாத்தளை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகளின் செயற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகாரயின் ஏற்பாட்டில் அவரது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் புலிகளுடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கை நாட்டில் பேரமைதியை ஏற்படுத்தியது.

நிரந்தர சமாதானம் ஏற்பட ஒரு முன்னறிவிப்பாக அதனை மக்கள் நம்பினர். அந்தக் காலகட்டத்தில் தான் ஆயுதங்களைக் கைவிட்டு தனது குழுவினர் ஐயாயிரம் பேருடன் ஜனநாயக வழிக்குத் திரும்ப கருணா அம்மான் முன்வந்தார். (அ-6)

# கச்சதீவை மீளப்பெற இந்தியாவுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவு சிவாஜிலிங்கம் எம்.பி.தெரிவிப்பு

கச்சதீவை இந்தியா மீண்டும் பெற்றுக் கொள்ளவேண்டும் என என்ற தமிழகத்தின் கோரிக்கைக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு தமது முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே.சிவலிங்கம் சென்னையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த ஆதரவை வெளியிட்டார். இந்தியா கச்சதீவை மீளப் பெறுவதன் மூலமே இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதற்கு முடிபு காண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா கச்சதீவை மீளப்பெறுமானால் இலங்கையில் உள்ள தமிழர்களும் மகிழ்ச்சியடைவர் என சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரம் மீனவர்களை தமிழீழ விடுதலைப்புலிகள் தடுத்துவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அவர் மறுத்தார். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் தமிழர்களை முற்றாகத் தமிழ் பிரதேசங்களில் வெளியேற்றி அவர்களைப் படுகொலை செய்வதற்கு முயற்சித்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இதன் காரணமாக தமிழ்ப் பிரதேசங்களில் இரண்டு இலட்சம் மக்கள் உள்ளக இடப்பெயர்வுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாவட்ட கலை இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

மாவட்ட கலை கலாசாரப் பேரவையால் நடாத்தப்படும் கலை இலக்கிய விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான கூத்துக் கலையை மேடையேற்றுவுதற்குக் களம் அமைத்துக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு பாடசாலைகளுக்கு இடையேயான தமிழ்த்தினப் போட்டியில் வலய மட்டத்தில் வெற்றி பெற்ற கூத்துக்களும் மாவட்ட செயலகத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் முதலிடம் பெற்ற கூத்து நிகழ்வும் மேடையேற்றி கௌரவிக்கப் படவுள்ளது.

இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் மௌலவி முகம்மது ஸரீப் முகம்மது மன்சூர் ஆகிய சமயப் பெரியார்களின் ஆசியுரைகளும் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிறப்பு விருந் தினர்களாக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாபூஷணம் நவாலியூர் ந.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இவ்விழாவிற்கு அனைவரையும் யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் அழைக்கின்றார்.

# சர்வதேச முதியோர் தினம்

சர்வதேச முதியோர் தினம் முன்னைய வருடங்களில் கொண்டாடப்பட்டது போல் இவ்வருடமும் ஒக்ரோபர் முதலாம் திகதி சகல பிரதேச செயலகங்களாலும் கொண்டாடப்பட வேண்டும் என வட மாகாண சமூக நலத் துறைப் பணிப்பாளர் யே.எஸ். அருள்ராஜ் அறிவித்துள்ளார்.

இதில் முதியோர் பற்றிய விழிப்புணர்வை சமூகத்தின் அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் ஏற்படுத்தும் முகமாக பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் போட்டிகள் என்பன பல்வேறு பிரிவினரிடையே நடாத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் பிரதேச செயலக மட்டத்தில் மாணவர் மற்றும் பொது மக்களிடையே கட்டுரை, கவிதை போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்கி ஊக்கப்படுத்துதல், முதியோரைக் கௌரவித்தல் என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன.கட்டுரை, கவிதை போட்டிகளுக்கான தலைப்புகளை பிரதேச செயலகங்களே தெரிவு செய்து போட்டிகளை நடாத்த வேண்டும் .

இவ் விழாவினை பிரதேசங்களிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், வலிந்துதவு சமூக சேவை அமைப்புக்களின் உதவியுடனும் ஏனைய நலன் விரும்பிகளின்அனுசரணையுடன் நடாத்துவது பொருத்தமானது என்றும் இவ்முதியோர்தினத்தைசிறுவர் தினத்துடன் இணைந்து நடாத்துவது விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்றும் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-19)

# இந்திய சுற்றுப் பயணம் இன்னமும் உறுதியாகவில்லை

## பொன்டிங் சந்தேகம் தெரிவிப்பு



அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் இந்தியச் சுற்றுப் பயணம் இன்னமும் உறுதியாகவில்லை என அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் கூறியுள்ளார்.

பாதுகாப்பு நிலைக்கு ஏற்ப சுற்றுப் பயணம் தொடர்பான முடிபு மாறலாம் என்று அவர் கூறியுள்ளார். இம் மாத இறுதியில் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி இந்தியா வருகை தந்து 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதனிடையே டில்லியில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்றது. இதனால் அவுஸ்திரேலிய வீரர்கள் மத்தியில் பாதுகாப்பு அச்சம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தியாவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அவுஸ்திரேலியா ஆய்வு செய்யும் என்றும் [illegible]றப்பட்டது. எனினும் திட்டமிட்டபடி இந்தியச் [illegible]றுப் பயணம் மேற்கொள்ளப்படும் என்று அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை தெரிவித்தது.

பாதுகாப்பு நிலைமை குறித்து வேறு விதமான அறிக்கை வராத வரை சுற்றுப் பயணம் தொடர்பான முடிபில் எந்த மாற்றமும் இல்லை என்றுதெரிவிக்கப்பட்டது. இந் நிலையில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் இந்திய சுற்றுப் பயணம் இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என்று கூறியிருக்கின்றார்.

அவுஸ்திரேலியத் தலைநகர் கான்பராவில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய அவர், பாதுகாப்பு நிலைமையின் அடிப்படையில் இந்த முடிபு மாறலாம் என்று கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை தொடர்ந்து பாதுகாப்பு நிலைமை குறித்து கவனித்து வரும் என்றும் அரசோடு இணைந்து சுற்றுப் பயணம் குறித்து முடிபு செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் விளையாடுவது பற்றி வீரர்கள் மத்தியில் அச்சமில்லை என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால் வெளியுறவுத் துறை அமைச்சுடன் கலந்தாலோசித்த பின்னரே இந்தியப் பயணம் குறித்து முடிபு செய்யப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (05)

# ஐ.சி.எல். அமைப்பில் இணைந்த பங்களாதேஷ் வீரர்களுக்குத் தடை

(டாக்கா)

ஐ.சி.எல். போட்டிகளில் பங்கேற்க ஒப்புக் கொண்டுள்ள பங்களாதேஷ் வீரர்களுக்கு 10 ஆண்டுகள் தடை விதிக்கப்படுவதாக அந்நாட்டுக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) சார்பில் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி முதல் இருபது-20 போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதில் பங்களாதேஷ் சார்பில் டாக்கா வாரியர்ஸ் என்னும் அணி பங்கேற்கவுள்ளது.

இந்த அணியில் பங்கேற்பதற்காக பங்களாதேஷ் வீரர்கள் சிலர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர்.


முன்னாள் அணித் தலைவர் அபிபுல் பஷார் தலைமையில் பல பங்களாதேஷ் வீரர்கள் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

டாக்கா வாரியர்ஸ் அணி நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக அறிமுகம் செய்யப்பட்டது.

இந்தச் செயல் பங்களாதேஷ் கிரிக்கெட்டுக்கு அதிர்ச்சியளித்துள்ளது. இதனிடையே பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் அவசர கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஐ.சி.எல். போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்குப் பத்து ஆண்டு தடை விதிப்பது என இந்தக் கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டது. (05)

# பிரமாண்டமான நிறைவு விழாவுடன் பீஜிங் பராலிம்பிக் விடைபெற்றது



(பீஜிங்)

ஒலிம்பிக் போட்டிக்கு நிகராக பராலிம்பிக்கையும் நடத்திக் காட்டியது சீனா. கடந்த 12 நாள்களாக பீஜிங்கில் நடந்த ஊனமுற்றோருக்கான பராலிம்பிக் போட்டிகள் நேற்று முன்தினம் நிறைவு பெற்றன.

வண்ணமயமான கலை நிகழ்ச்சிகள், கண்கவர் வாண வேடிக்கை என நிறைவு விழா மிகப் பிரமாண்டமாக நடந்தது. சீனத் தலைநகர் பீஜிங்கில் ஊனமுற்றோருக்கான 13-வது பராலிம்பிக் போட்டி நடந்தது.

தென்னாபிரிக்க நீச்சல் வீராங்கனை நதாலி டு டாய்ட் மற்றும் அவுஸ்திரேலியாவின் மத்யூ காவ்ட்ரி தலா 5 தங்கம் வென்று அசத்தினர். செயற்கைக் கால்களுடன் அசுர வேகத்துடன் ஓடிய தென்னாபிரிக்காவின் ஆஸ்கார் பிஸ்டோரிஸ் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 400 மீற்றர் ஓட்டத்தில் புதிய சாதனை படைத்து 3 தங்கம் வென்றார்.

சீனாவிலுள்ள சுமார் 8 கோடி ஊனமுற்றோருக்கு எவ்வித வசதிகளையும் அரசு செய்து கொடுக்கவில்லை என்று குற்றஞ் சுமத்தப்பட்டது.

இந்தப் புகாரைத் தகர்த்தெறியும் வகையில் பராலிம்பிக் போட்டிகளைச் சிறப்பாக் நடத்தியுள்ளது சீனா. ஊனமுற்றவர்களுக்கு ஏற்ற வகையில் புதிய டாக்சிகளை அறிமுகப்படுத்தியது, சீனப் பெருஞ்சுவர் போன்றவற்றைச் சுற்றிப் பார்க்க ஊனமுற்றோருக்கு விசேட வசதி செய்து கொடுத்தது. அனைத்துக்கும் மகுடம் வைத்தாற்போல் நேற்று முன்தினம் நிறைவு விழா நிகழ்ச்சிகள் அமைந்தன.

பீஜிங்கிலுள்ள பேர்ட்ஸ் நெஸ்ட் அரங்கம் விழாக் கோலம் பூண்டிருந்தது. வாண வேடிக்கை, கலை நிகழ்ச்சிகள் என அசத்தியது. இதனைத் தொடர்ந்து போட்டியில் பங்கேற்ற வீரர், வீராங்கனைகளின் அணி வகுப்பு நடந்தது.

### லண்டன் வரவேற்கிறது

கடந்த 12 நாள்களாக ஊனமுற்ற வீர வீராங்கனைகளுக்குப் புத்துணர்ச்சி தந்த பராலிம்பிக் போட்டிகள் நிறைவடைந்தன. அடுத்த பராலிம்பிக் தொடர் லண்டனில் எதிர் வரும் 2012 ஆம் ஆண்டு நடக்கின்றது.(05)

# இலங்கை ஏ அணி வெற்றி

தென்னாபிரிக்க பல்கலைக்கழக அணியுடனான ஒரு நாள் போட்டியை இலங்கை ஏ அணி 62 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. தென்னாபிரிக்க சுற்றுப் பயணம் மேற்கொண்[illegible]ள திலின கண்டம்பி தலைமையிலான இலங்கை ஏ அணி தென்னாபிரிக்க ஏ அணியுடனான உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடரை 0-1 என்ற கணக்கில் கோட்டை விட்டது.

இந்நிலையில் இலங்கை ஏ அணி ஸ்னோவிக் பார்க்கில் நேற்று முன்தினம் தென்னாபிரிக்கப் பல்கலைக்கழக அணியைச் சந்தித்தது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை ஏ அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குணவர்தன 125 பந்துகளுக்கு 90 ஓட்டங்களைப் பெற்றார். மறுமுனையில் உபுல் தரங்க 43 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்கப் பல்கலைக்கழக அணி 38 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

விக்கெட் காப்பாளரான சொடுமோ அதிகபட்சமாக 43 ஓட்டங்களைப் பெற்றார். சிறப்பாகப் பந்து வீசிய லக்மால் 9 ஓவர்களில் 38 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இது தவிர சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அடுத்து இலங்கை மற்றும் தென்னாபிரிக்க ஏ அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி இன்று பொட்செஸ்ட்ரூமில் நடைபெறவுள்ளது. (05)

# சீனா முதலிடம்

(பீஜிங்)

பராலிம்பிக் தொடரிலும் ஆதிக்கம் செலுத்திய சீனா 89 தங்கம், 70 வெள்ளி, 52 வெண்கலம் உட்பட 211 பதக்கங்கள் வென்று முதலிடம் பிடித்தது.

இது இரண்டாமிடம் பிடித்துள்ள பிரித்தானியாவை விட சுமார் 2 மடங்கு அதிகமாகும். பிரித்தானியா 102 பதக்கங்கள் (42 தங்கம், 29 வெள்ளி, 31 வெண்கலத்துடன்) கைப்பற்றியது.

வழக்கமாக முதலிடம் பிடித்து அசத்தும் அமெரிக்கா ஒலிம்பிக்கைத் தொடர்ந்து இங்கும் ஏமாற்றம் கண்டது. 36 தங்கம், 35 வெள்ளி, 28 வெண்கலம் உட்பட 99 பதக்கத்துடன் மூன்றாவது இடத்தை கைப்பற்ற முடிந்தது.பதக்கப் பட்டியலில் முதல்10 நாடுகள்.

| இடம் | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 89 | 72 | 52 | 211 |
| 2 | பிரிட்டன் | 42 | 29 | 31 | 102 |
| 3 | அமெரிக்கா | 36 | 35 | 28 | 99 |
| 4 | உக்ரைன் | 24 | 18 | 32 | 74 |
| 5 | ஆஸ்திரேலியா | 23 | 29 | 27 | 79 |
| 6 | தென் ஆப்ரிக்கா | 21 | 3 | 6 | 30 |
| 7 | கனடா | 19 | 10 | 21 | 50 |
| 8 | ரஷ்யா | 18 | 23 | 22 | 63 |
| 9 | பிரேசில் | 16 | 14 | 17 | 47 |
| 10 | ஸ்பெயின் | 15 | 21 | 22 | 58 |

# இந்தியன் கிரிக்கெட் லீக் வீரர்கள் தீண்டத் தகாதவர்களா?

## இந்தியக் கிரிக்கெட் சபை மீது கபில்தேவ் தாக்கு



(புதுடில்லி)

இந்திய முன்னாள் அணித் தலைவரும் தற்போதைய ஐ.சி.எல். தலைவருமான கபில் தேவ் ஐ.சி.எல்லில் இணைந்த கிரிக்கெட் வீரர்கள் மீது பி.சி.சி.ஐ. காட்டும் பாரபட்சம் குறித்துக் கடும் விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

ஐ.சி.எல். இரண்டாவது போட்டித் தொடர் அறிமுகத்தின் போது கபில்தேவ், எங்களுடன் சேர்ந்த வீரர்களைத் தீண்டத் தகாதவர்கள் போல இந்திய கிரிக்கெட் சபை நடத்துவது ஏன் என்று புரியவில்லை.

கிரிக்கெட்டுக்கு சில இளம் வீரர்களை நாங்கள் உருவாக்கித் தருகின்றோம். வீரர்களை அவர்கள் செய்யாத தவறுக்காகக் கிரிக்கெட் சபை பழி வாங்கி வருகின்றது என்று ஆவேசமாகப் பேசினார்.

இந்தியக் கிரிக்கெட்டின் வளர்ச்சிக்குத் தான் நாங்கள் இருக்கின்றோம். நான் எப்போதும் கிரிக்கெட் சபையின் பகுதியாகவே என்னைக் கருதுகின்றேன். ஆனால் அவர்கள் கிரிக்கெட்டை ஏகபோக உரிமையாக்கியுள்ளார்கள்.

அவர்களுக்குப் பரந்த இதயம் வேண்டும். மேலும் எனது வீரர்களுக்காகவே நான் வழக்கைச் சந்திக்க நேரும் என்று சிந்தித்துக் கூடப் பார்க்கவில்லை என்று அவர் ஐ.சி.எல். வீரர்களுக்கும் அந்த வீரர்கள் சார்ந்த கிரிக்கெட் சபைக்கும் இடையேயான நீதிமன்ற வழக்குகள் குறித்துக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், ஐ.சி.எல். வீரர்கள் இவ்வாறு பலிக்கடாவாக்குவதற்குக் காரணம் ஒரே ஒரு நபர்தான். அந்தக் குறிப்பிட்ட மனிதரின் பெயரை நான் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை.

எல்லோருக்கும் அவர் யார் என்று தெரியும். எங்களைச் சிறுமைப்படுத்த ஏற்படுத்தும் தடைகளையும் மீறி நாங்கள் மேலும் பலம் பெற்று வருகின்றோம். நாங்கள் தொடர்ந்து இளம் வீரர்களுக்குக் கிரிக்கெட்டுக்கான களத்தை அமைத்துக் கொடுத்துக் கொண்டிருப்போம் என்றார் கபில்தேவ்.

அவர் பி.சி.சி.ஐ. மீது ஒரு முக்கியமான குற்றச்சாட்டையும் எழுப்பியுள்ளார். அதாவது இந்தியன் கிரிக்கெட் லீக்கில் இணைந்த வீரர்களுக்கு இந்தியக் கிரிக்கெட் சபை கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகைகளை இன்னமும் கொடுக்காமல் வைத்துள்ளது என்று கூறியுள்ளார்.

கபிலின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்தியக் கிரிக்கெட் சபைச் செயலர் நிரஞ்சன் ஷா கூறுகையில்,

அவர் எதை வேண்டுமானாலும் உளறி விட்டுப் போகட்டும். எங்களுக்குக் கவலை இல்லை. எங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்றார். (05)

## சுற்றிவளைப்புத்...

அண்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலில் சுமார் 125 பேரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர். நுகேகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 12 பொலிஸ் நிலையங்களில் இந்த சோதனை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதில் 24 பேர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட 53 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனையோர் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தவறியவர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

**பிலியந்தலையில்**

பிலியந்தலைப் பிரதேசத்தில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில்18 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிலியந்தலை மடபான, கஹபொல, நிவென்திடிய, பொகுந்தர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தமிழர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய எவ்வித ஆவணங்களும் குறித்த சந்தேக நபர்களிடம் காணப்படவில்லை எனவும் அனைவரும் தோட்டப்புறங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் எனவும் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பும் உள்ளதா என்பது குறித்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

## பஸ் மீது கிளைமோர்த்...

ஆகியோர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புளியங்குளம் புதூர் சந்தியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரால் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகளின்ஆதரவு ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கிளைமோர் கண்ணிவெடி தாக்குதலுக்கும் இராணுவத்தினருக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று கொக்காவில் பகுதியில் இராணுவத்தினரால் ஆழ ஊடுருவி அம்புலன்ஸ் வண்டியொன்றை இலக்கு வைத்து கிளைமோர் கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கும் இராணுவத்தினருக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றும் இந்தப் பகுதிகளில் இராணுவத்தினர் செயற்படவில்லை என்றும் விடுதலைப் புலிகள் வன்னிப் பிரதேசத்தில் எதிர்கொண்டு வருகின்ற தோல்வி மற்றும் பின்னடைவுகளை மறைப்பதற்காக விடுதலைப் புலிகளின் ஆதரவு ஊடகங்கள் இவ்வாறு செய்தி வெளியிட்டிருப்பதாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(ச-5)

## நாச்சிக்குடா...

விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக இராணுவத் தலைமையகம் கூறியிருக்கின்றது.

எனினும் இந்தத் தகவல்கள் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து உடனடியாக தகவல்கள் எதுவும் வரவில்லை. (ச-5)

## வன்னிப்...

யொன்றை (சிஸ்டம் ஒன்றை) விமானப்படையினர் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் குண்டு வீசிதாக்கி அழித்துள்ளதாக இராணுவ தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் போர்முனைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மதியம் விமானப்படைக்குச் சொந்தமான தாக்குதல் விமானங்களும், எம்.ஐ. 24 ரக ஹெலிகொப்டர்களும் அடுத்தடுத்து நடத்திய விமானக்குண்டுத் தாக்குதல்களில் விடுதலைப் புலிகளின் மேலும் ஒரு மோட்டார் பீரங்கித் தளம் அழிக்கப்பட்டுள்ளதாகவும், வன்னேரிக்குளம் முன்னரங்க பகுதியில் விடுதலைப் புலிகள் ஒன்றுகூடும் இடம் ஒன்று தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் இது குறித்து விடுதலைப் புலிகள் உடனடியாக கருத்து எதனையும் வெளியிடவில்லை.

(ச-5)


*The Members of the*

*Jaffna College Staff Tennis Club*

*Cordially invite*
*to the Finals of the*
*Luther Selvarajah*
*Memorial Annual Tennis Tournament -2008*
*(From 21st August to 20th September)*
*on Saturday the 20th September 2008 at 9.00 A.M.*
*at Jaffna College*
*and to the Prize Distribution thereafter under the*
*distinguished Patronage of*
*Mr.E.S.P.Nagaratnam*
*Properitor ESP & Co.*

**Principal**

(C-1574)

யாழ்.மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

17-ம் ஆண்டு நிறைவு விழா அழைப்பு

| | | |
|---|---|---|
| காலம் | :- | 19.09.2008 (வெள்ளிக்கிழமை) |
| நேரம் | :- | மு.ப 11.30 மணி |
| இடம் | :- | சங்கத் தலைமைக் காரியாலயம் (559, நாவலர் வீதி,யாழ்ப்பாணம்) |
| பிரதம விருந்தினர் | :- | திரு.ம.பிரதீபன் (திட்டப்பணிப்பாளர்) (புனர்வாழ்வு்புனரமைப்பு மாவட்ட செயலகம்) |
| கௌரவ விருந்தினர் | :- | திரு.S.ரவீந்திரா (முகாமையாளர், இலங்கை வர்த்தக வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) திரு. V.S.முதலி (முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்) |

அனைத்து அங்கத்தவர்களையும், முன்னாள் அங்கத்தவர்களையும் மு.ப.11.00 மணிக்கு சமூகமளித்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

செயலாளர்
யாழ்.மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

(C-1575)


## கொழும்பில் தங்கியுள்ள...

தினமும் அரச நிருவாகப் பிரதேசங்களுக்கு வரும் பொதுமக்களுக்குத் தேவையான சகல அடிப்படை வசதிகளை வவுனியா பிரதேசத்தில் அரசாங்கம் வழங்கிக் கொண்டிருக்கின்றது. அவர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

எனினும் தமது உறவினர்களின் உதவிகளை நாடி வந்து கொழும்பிலும் மேல் மாகாண பொலிஸ் பிரிவுகளிலும் தற்காலிகமாகத் தங்கியிருப்போர் அரசாங்கத்தின் நலன்புரி சலுகைகளை பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். இவர்களது நன்மை கருதியே இடம்பெயர்ந்தோர் தொடர்பான கணிப்பீடொன்றை மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இத்திட்டத்தின்படி இம்மாதம்21 ஆம் திகதி காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையில் மேல்மாகாணத்தில் உள்ள சகலபொலிஸ் பிரிவுகளிலும் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோரைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

அவசரகாலச் சட்டத்தின்படி 23-வது சரத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்துக்கு சட்டமா அதிபரினதும் உயர் நீதிமன்றத்தினதும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. தகவல்களை திரட்டுவதற்காக தனியான ஒரு பத்திரத்தை பொலிஸார் தயாரித்துள்ளனர்.

பிரதான குடியிருப்பாளர் இந்தப் பத்திரத்தை நிரப்பி தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி பொலிஸாரிடம் கையளிக்க வேண்டும்.

ஒருவர் கிராம சேவகரின் பதிவையோ அல்லது தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையோ தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கலாம். இதற்காக மேல் மாகாண பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸ் நிலையங்களை அடுத்துள்ள பாடசாலைகள், சமய மற்றும் பொது ஸ்தாபனங்களிலும் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் ஏற்கனவே பொலிஸ் பதிவுகளை மேற்கொண்டவர்கள் மீண்டும் பதிவு செய்யவேண்டிய அவசியமில்லை. எனினும் கடந்த ஐந்து வருடத்துக்குட்பட்ட காலத்துக்குள் இடம்பெயர்ந்துள்ள அனைவரும் இந்த பதிவினை மேற்கொள்ளவேண்டும் என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் கூறினார்.

(ச-5)

## வன்னியில் இருந்து...

ஆண்டகை, வவுனியா மற்றும் மடு தேவாலயம் ஆகியவற்றுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்றுவிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மீண்டும் கொழும்பு திரும்பினார்.

அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே ஆயர் இதனைத் தெரிவித்தார். தற்போதைய நிலைமை தொடர்பாக ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் மேலும் தெரிவிக்கையில்,

மனிதநேயத் தொண்டு நிறுவனங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து வெளியேறியமை கவலை தருகின்றது. பாதுகாப்பு நெருக்கடிகளால் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெயருகின்ற மக்கள் வவுனியாவுக்கு வந்து தங்குவதற்கான சூழ்நிலை தற்போதைக்கு இல்லை. இடம்பெயர்ந்துள்ள மக்கள் தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற இடங்களில் தங்கியுள்ளனர்.

அவர்கள் 50 மைல் தூரம் வரை நடந்து வவுனியாவுக்கு வரமுடியாது. அதற்கான போக்குவரத்து வசதிகள் எதுவும் அங்கில்லை. தற்போது போர் நடைபெறுகின்றது. இந்நிலையில் அவர்கள் அங்கிருந்து ஏ-9 பாதையூடாக வரமுடியாது.

ஆகவே இடம்பெயர்ந்துள்ள மக்களை வவுனியாவுக்கு வருமாறு அரசாங்கம் தற்போதைக்கு அழைக்க முடியாது. அதேவேளை வவுனியாவுக்கு வருகின்ற மக்களுக்கு உரிய தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றுஇராணுவ அதிகாரிகள் என்னிடம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்கள் தா[illegible]யுள்ள முகாம்களை பராமரிக்கும் பொறுப்பு அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கையளிக்கப்படுமென்வும் இராணுவ அதிகாரிகள் என்னிடம் உறுதியளித்துள்ளனர். இது தொடர்பாக இராணுவ அதிகாரிகள் என்னுடன் கலந்துரையாடினர்.

ஆனாலும் மக்கள் தற்போதுள்ள நிலையில் வவுனியாவுக்கு வந்து தங்குவதற்கான நிலைமை இல்லை. எனவேதான் வன்னிப் பெருநிலப் பரப்பில்இடம்பெயர்ந்த மக்களுக்கான பாதுகாப்புக்களையும் மற்றும் நிவாரணங்களையும் அரசாங்கம் வழங்கவேண்டுமென கோரிக்கை விடுகின்றேன்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான அடிப்படை வசதிகளையும் உணவு மற்றும் மருந்துப்பொருட்களையும் வழங்குவதற்கு அனைத்துலக நிறுவனங்களும் உடனடியாக முன்வர வேண்டும் எனவும் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் கோரிக்கை விடுத்தார்.

(ச-5)

## வன்னேரியில் மோதல்...

படையினரின் இத்தாக்குதல் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் பலமான தாக்குதலை நடத்தினர் என புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வன்னி விளாங்குளம் -புதூர் மன்னகுளம் பகுதிகளை நோக்கிய படையினரின் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 13 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

வன்னி விளாங்குளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் படையினரின் தாக்குதல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணிவரை இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளின் பதுங்கிச் சூடு, மிதிவெடி மற்றும் பொறிவெடி ஆகியவற்றில் சிக்கி 13 படையினர் கொல்லப்பட்டனர். 8 பேர் காயமடைந்தனர் என புலிகள் தெரிவித்தனர்.

நாச்சிக்குடா பகுதியில் உள்ள கரம்பைக்குளம் குளக்கட்டுப் பகுதியிலும் அக்கராயன் குளப் பிரதேசத்திலும் விடுதலைப் புலிகளுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கடும் மோதல்களில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இச்சண்டைகளில் 40 விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளதாகவும் இராணுவ தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருக்கின்றது. இந்த மோதல்களில் காயமடைந்த படையினரின் எண்ணிக்கை 27ஆக உயர்ந்திருப்பதாகவும் இராணுவத் தலைமையகம் கூறியிருக்கின்றது.

ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளமுடைய கரம்பைக்குளம் குளக்கட்டுப் பகுதியியை விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றியுள்ள இராணுவம், நேற்று அந்தப் பகுதியில் மேலும் ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளமுடைய பகுதியை விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றியிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது.

(ச-5)

## கிளிநொச்சிக்கான உணவுப்...

இது குறித்து கிளிநொச்சி அரச அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்துள்ளதாவது,

சுமார் 6 ஆயிரத்து 500 குடும்பங்கள் அகதிகளாக இடம்பெயர்ந்திருக்கிறார்கள். இவர்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் பகுதிக்கும், கண்டாவளை பகுதிக்கும் சென்றிருக்கிறார்கள்.

நாங்கள் வழமையாக உலக உணவுத்திட்டத்தின் கீழே நிவாரணம் கொடுப்பது வழக்கம். ஆனால் இம்முறை எங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தினுடைய உலக உணவுத் திட்டத்தினுடைய களஞ்சியத்திலே போதிய அளவு இருப்பு இல்லை.

இது தொடர்பாக நாம் மேலதிகமான உணவுப் பொருட்களை அனுப்புமாறு கோரிக்கை விடுத்திருக்கிறோம். ஐ.நா அமைப்புக்கள் வெளியேறியதன் பின்னர் எமது மாவட்டத்திற்கு உலக உணவுத்திட்டத்தின் கீழான எந்தவிதமான பொருட்களும் அனுப்பப்படவில்லை.

களஞ்சியத்தில் குறைந்தளவு தான் கையிருப்பில் இருக்கின்றது. வாரத்தில் மூன்று நாட்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்குமாக சராசரியாக 20 லொறிகளுடைய உணவு மற்றும் உணவல்லாத பொருள்களுமாக அனுப்பப்பட்டு வந்தன.

அந்தளவுக்கு கடந்த திங்கட்கிழமையும் புதன்கிழமையும் கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய உணவுகளை அனுப்புகின்ற முறையாக இருந்தும் இந்த இரண்டு நாட்களுமே எந்தவிதமான உணவுப் பொருட்களும் எம்மால் இந்த இடத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

இது தெரடர்பாக வவுனியா இராணுவ அதிகாரிகளிடமும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடமும் தொடர்பு கொண்டிருக்கின்றோம்.

இன்னமும் இது தொடர்பாக எந்தவொரு முடிபும் கிடைக்கவில்லை என்றார்.

(ச-3)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.